
www.tamilarangam.net

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

Raya

# தமிழீழம்




வெளியீடு: அரசியல் பிரிவு, தமிழீழ விடுதலைப்புலிகள்.
குரல் 18. டிச-89, ஜன-90 அன்பளிப்பு: ரூ 3/-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net









மாவீரா நாள் பொதுக்கூட்டம்
திலீபன் 2வது ஆண்டு நினைவு தின நிகழ்ச்சிகள்

முன் அட்டையில்

அமபாறை மாவட்டத்தில் நவம்பர் 27-ம் நாள் யோகி, பாலசிங்கம் ஆகியோர் பங்கேற்ற மாவீரர் நாள் பொதுக்கூட்டம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலிகளின் குரல்

## எதிர்பார்ப்பு

1987 ஜூலை 29-ல் ராஜீவ்காந்தி ஜெயவர்த்தனாவோடு செய்துகொண்ட அமைதி உடன்படிக்கையானது தமிழீழ விடுதலைப் போராட்டத்தை படுகுழியில் தள்ளிவிட்டது.

ஈழத்தமிழ் மக்களின் அடிப்படைச் சிக்கல்கள் எவையும் இந்த அமைதி உடன்படிக்கையின்போது ஆராயப்படவேயில்லை. ஈழத் தமிழ் மக்களதோ, மக்கள் அமைப்புகளதோ ஒப்புதலும் விருப்பும் இன்றி இந்த உடன்படிக்கையை தமிழ் மக்கள் சார்பில் தன்னிச்சையாக ராஜீவ்காந்தி செய்துகொண்டார்.

கடந்த காலங்களில் தொடர்ந்துவந்த சிறீலங்கா ஆட்சியாளர்களால் திட்டமிடப்பட்ட குடியேற்றங்களின் மூலம் பறிக்கபபட்டுவந்த தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய நிலங்களை மீட்கவோ, மீதியிருக்கும் நிலத்தைக் காப்பாற்றவோ இந்த உடன்படிக்கை வகை செய்யவில்லை.

சிங்கள வெறியர்களாலும், அரசபடைகளினாலும் அடிக்கடி தமிழ் பேசும் மக்கள்மீது நிகழ்த்தப்பட்டுவந்த இனவெறித் தாக்குதல்கள் நிறுத்தப்படவோ, அவற்றிலிருந்து தமிழ் பேசும் மக்கள் பாதுகாக்கப் படவோ இந்த உடன்படிக்கை வழிவகை செய்யவில்லை.

தமிழ் பேசும் மக்கள் தாழ்வுற்றுக்கிடக்கும் தமது பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்வதற்கும் இந்த உடன்படிக்கை வகை செய்யவில்லை.

ஆனால் இலங்கை முழுவதிலும் மாகாணக் கவுன்சில்கள் அமைக்கப்படுவதற்கே இந்த உடன்படிக்கை வழிவகுத்தது.

இந்த மாகாணக் கவுன்சில்கள் என்பது அதிகாரப் பரவலாக்கத்துக்கான அமைப்பு என்ற வெளித்தோற்றத்தைக் கொண்டிருந்தாலும் உண்மையான அதிகாரப் பரவலாக்கம் எதுவும் இவற்றினால் ஏற்படவில்லை. மத்தியில் அதிகாரக் குவிப்புத்தான் நிகழ்ந்துள்ளது. இந்த மாகாணக் கவுன்சிலை மாகாண அரசு என்று பெயருக்குத் தானும் குறிப்பிடக்கூடாது என்று சிறீலங்கா அரசு உத்தரவிட்டு அதன் அதிகாரிகளும் அதைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

எலும்புத் துண்டுகளுக்காக ஏங்கிநிற்கின்ற தன்னலவாதிகள் சிலர் மாகாண அரசு என்றும், மாகாண முதல்வர் என்றும் பிதற்றிப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர தமிழ் மக்கள் எவரும் இந்த மாகாணக் கவுன்சில்களினால் திருப்தியடைந்துவிடவில்லை.

ஆனாலும் மாநகராட்சிக்கு இருக்கக்கூடிய அதிகாரங்கள்தானும் இல்லாத இந்தக் கவுன்சில்களை ராஜிவ்காந்தி தமது போபர்ஸ் கறையை மறைப்பதற்காகவும், தான் சமாதானப் பிரியர் என்று பெயரெடுப்பதற்காகவும் கிலுகிலுப்பைபக்காரன் குழந்தைகளுக்கு வேடிக்கைகாட்டி ஏமாற்றுவதுபோல, மாகாணக்கவுன்சிலை மாகாண அரசு என்று பூதாகரப்படுத்திக் காட்டி, தமிழீழ மக்களுக்கு தனி மாநிலம்

## வாழ்வதற்காகவே சாகிறோம்

முன்னரெம் மூத்தோர்
இழந்த நம் உரிமையை
மீட்கும் உறுதியில்
ஆயுத மேந்தினோம்

அன்னையின் மேனியில்-
பதிந்த
அந்நியப் பதிவினை
அழிக்கவே
உதிரத்தை ஊற்றினோம்

வருந்து வதற்கல்ல - நாம்
நம்மினம்
வாழ்வதற்காகவே
சாகிறோம்.



www.tamilarangam.net



பெற்றுக் கொடுத்திருப்பதாக விளம்பரப்படுத்தியதனால் சிங்கள வெறியர்கள் அந்த மாகாணக் கவுன்சில்கள் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவிடக்கூடாது என மூர்க்கத்தனமாக அதை எதிர்க்கும் நிலை ஏற்பட்டது. தன்நலத்துக்காக ராஜீவ்காந்தி மாகாண அரசு என்று விளம்பரப்படுத்தியிராவிட்டால் அதிகாரங்களற்ற இந்த மாகாணக் கவுன்சில்களைச் சிங்கள மக்கள் எதிர்த்திருக்க மாட்டார்கள். இந்த மாகாண நிர்வாகத்திடம் அதிகாரங்களைக் கொடுப்பதற்கும் இலங்கை அரசு தயக்கம் காட்டியிருக்காது.

தமிழ் மக்கள் அடிப்படைச் சிக்கல்கள் எவற்றையும் தீர்க்கமுடியாத மாகாணக் கவுன்சிலை ஏதோ மாகாண அரசு, தன்னாட்சி அமைப்பு என எண்ணிய சிங்கள வெறியர்கள் அதை எதிர்த்துக் கிளர்ந்து சிங்களப் பகுதியிலும் குருதி வெள்ளம் பெருக்கெடுத்தோடும் நிலை ராஜீவ்காந்தியின் தன்னலப் போக்கினாலேயே ஏற்பட்டுள்ளது.

இந்த இனச் சிக்கலுக்குள் இந்திய இராணுவத்தையும் மீளமுடியாமல் சிக்கவைத்து, சிக்கலையும் முன்பிருந்ததைவிட பெரிதாக்கியதுடன் தனது வரட்டுப் பிடிவாதத்தினாலும், தன்னலப் போக்கினாலும், இந்திய அரசின் களஞ்சியத்திலிருந்து பெருமளவு பணத்தையும் செலவு செய்து, இந்திய இராணுவத்தினரது விலை மதிக்கமுடியாத உயிர்களையும் கொடுத்து இந்தியாவுக்கு சிங்கள மக்களின் பகையையும், தமிழ் மக்களின் வெறுப்பையும் உலக அரங்கில் ஆக்கிரமிப்பு நாடு என்ற அவப்பெயரையும் ராஜீவ்காந்தி பெற்றுக் கொடுத்திருக்கிறார்.

அத்துடன் தொடக்கத்திலிருந்தே ஈழச் சிக்கலில் ராஜீவ்காந்தி மேற்கொண்டு வந்த மூர்க்கத்தனமான, முறைகேடான, முட்டாள்தனமான, நயவஞ்சகமான, ஆயுத அடக்குமுறையிலான நடவடிக்கைகளினால் இந்தியாவின் மதிப்புக்கும் களங்கம் ஏற்பட்டுள்ளது.

இந்திய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நடுவண் அரசு ஈழச் சிக்கலில் ராஜீவ்காந்தியின் வழியைப் பின்பற்றி இந்தியாவுக்கு அவர் அரசு ஏற்படுத்திய பழியையும், சுமையையும் மேலும் அதிகப் படுத்தாமல் அந்த வழியை முற்றிலுமாக நிராகரித்து புதிய பாதையில், சரியான பாதையில் அடி எடுத்து வைத்து ஈழத் தமிழர் நலன்களைப் பேணி மீண்டும் இந்தியாவின் மதிப்பையும், பெருமையையும் உலக அரங்கில் உயர்த்திவைக்கும் என்று ஈழத் தமிழர்கள் மட்டுமல்ல, இந்திய மக்களும் உலக மக்களுங்கூட எதிர்பார்க்கிறார்கள்.

# விடுதலை தேடிய வீர வேங்கைகள்

இலங்கைத் தீவானது 400 ஆண்டுகளுக்கு மேலாக (1505-1948) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய அந்நிய நாட்டவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு அடக்கி ஒடுக்கப் பட்டு, சூறையாடப்பட்டு வந்தது. அக்காலக்கட்டத்தில் இலங்கைத்தீவின் தென்பகுதியில் சிங்கள மக்களும், வடபகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் தமிழ் மக்களும் அவர்களை எதிர்த்துப் போராடிக்கொண்டுதான் இருந்தார்கள். இம்மக்களுக்குத் தலைமைதாங்கிய சிங்கள மன்னர்களும் பண்டாரவன்னியன், சங்கிலியன் போன்ற தமிழ் மன்னர்களும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடிபணிய மறுத்து வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்கள்.

சங்கிலிமன்னனின் யாழ்ப்பாண அரசு வீழ்ச்சியுற்றதன்பின் ஏறக்குறைய 330 ஆண்டுகள் நாம் அடிமை நிலைக்குள் ஆளாக்கப்பட்டோம். அந்நியப்படை இத்தீவைவிட்டு அகன்றபோது (1948-ல்) நாம் சிங்கள மேலாதிக்கத்தால் அடக்கி ஒடுக்கப்படும் நிலையை அடைந்தோம். எம் இன மக்களின் அகிம்சைப் போராட்டங்கள் பலாத்காரமான முறையில் அடக்கி ஒடுக்கப்பட்டதனால் எமது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நாம் ஆயுதம் ஏந்தவேண்டியவர்களானோம்.

www.tamilarangam.net



உலகின் எந்த ஒரு தேசிய விடுதலை இயக்கமும் பிராந்திய வல்லாதிக்கம், அந்நிய ஏகாதிபத்தியம் இன மேலாதிக்கம் போன்ற அடக்குமுறைகளைத் தகர்த்தெறியும் சிறந்த போர்த் தந்திரோபாயமாக கெரில்லாப் போர்முறையையே தெரிந்தெடுத்திருக்கிறது. இக் கெரில்லாப் போராட்டம் எத்தனையோ தேசிய இனங்களை விடுவித்திருக்கிறது.

இத்தகையதொரு போர் முறையைத்தான் இன்று எமது விடுதலை இயக்கம் மேற்கொண்டிருக்கின்றது. ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணையும், நசுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் எமது உரிமைகளையும் மீட்டெடுப்பதற்காகவும், அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எமது இனத்தைக் காப்பதற்காகவும் ஆயுதம் தாங்கிப் போராடவேண்டியது தமிழ் பேசும் மக்கள் அனைவரினதும் பொதுவான கடமையாகும். இதை உளப்பூர்வமாக உணர்ந்துகொண்ட தமிழீழப் பெண்கள் தம்மை கெரில்லாப்படையில் சேர்த்துக் கொண்டனர். அத்தோடு இத்தேச விடுதலைப் போராட்டத்தோடு, தம்மை நடத்திக்கொண்டிருக்கும் சமூக அடக்குமுறையை உடைத்து எறியும் வழிகளையும் வகுத்துக்கொண்டனர்.

எமது கெரில்லாப் போராட்டத்தில் சரியான போக்கை பல சந்தர்ப்பங்களில் கண்டுகொள்ள முடியும். சிறிலங்காவுடனான மோதலில் குறுகியகால இடைவெளியில் தமிழ் பிராந்தியங்களை நாம் எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தோம்.

தமிழீழ விடுதலைப் போர் உன்னத நிலையை அடைந்து வரும்பொழுது அதனை ஒடுக்கி, அழித்துவிடும் நோக்குடன் எமது மண்ணை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இந்திய வல்லாதிக்கத்தின் முகத்தில் கரியைப் பூசினோம். உலகமே வியந்து பார்க்கின்றது. இத்தகைய சாதனைகளை ஈட்டுவதில் பெண்கள் படையணி எவ்வகையான வீரம் செறிந்த செயற்பாடுகளை ஆற்றியுள்ளது என்பதை நாம் வார்த்தைகளாலோ, எழுத்துக்களாலோ தெரிவிக்கவேண்டிய அவசியம் இல்லை.

பல சிறீலங்கா இராணுவத்தினரை வீழ்த்தி, அவர்களில் 9 பேர்களின் உடல்களையும், ஆயுதங்களையும் கைப்பற்றிய (12-10-86ல் மன்னாரில் நடந்த) நேரடி மோதலில் லெப். கேர்ணல் விக்டரின் தலைமையில் பெண்கள் படையணி தங்கள் பணிகளைச் செய்ததும், யாழ்ப்பாணம் தொலைத் தொடர்பு நிலையத் தாக்குதல், 15-7-87ல் நடந்த கரும்புலி மில்லரின் நெல்லியடி மகாவித்தியாலயம் சிறீலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதல், வல்வெட்டித்துறை மயிலியதனை முகாம் மீதான தாக்குதல் ஆகியவற்றில் பெரும் பங்காற்றி இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவைமட்டுமல்ல 10-10-87ல் தமிழீழ - இந்தியப்போர் ஆரம்பமானபோது அன்றைய தினம் கோப்பாயில் உலகின் 4 வது பெரிய இராணுவமான பிராந்திய வல்லாதிக்க காலாட்படையினது பெருந்தொகையான கவச வாகனங்களின் தொடரை வழிமறித்து முதல் தாக்குதல்களைத் தொடுத்தவர்களும் பெண்கள் படை அணியினரே. இக்களத்தில் முன்னணியில் நின்ற **2வது லெப். மாலதி** காலில் சூடு வாங்கி சயனைட் உட்கொண்டு தமிழீழ இந்தியப் போரில் முதல் வீரச் சாவைத் தழுவிக் கொண்டவளானாள். இதே களத்தில்தான் எமது தோழியர்களான தயா, ரஞ்சி, கஸ்தூரி ஆகியோரும் விடுதலைக்காய் தம்மை முழுமையாக அர்ப்பணித்து வீரமரணத்தைத் தழுவினர்.

இந்தியப்படை நமது மண்ணை விட்டு அகலும்வரை எமது போரைத் தொடருவோம் என்று போர்க்களத்தில் நின்ற பெண் புலிகளில் விஜியும், ஜேனேவும் 19-10-87 ல் கோப்பாயில் நடந்த மோதலில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டனர். 03-11-87 ல் கோண்டாவிலில் நடந்த மோதலில் அன்புத் தோழியர்கள் கவுரியும், ரூபியும் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டனர்.

விடுதலை தேடிய வேங்கைகளே உங்கள் கனவுகளைச் சுமந்து இங்கு பல நூறு வேங்கைகள் அணிவகுத்து நிற்கின்றோம். சமதர்ம தமிழீழ இலட்சிய தாகம் தீரும்வரை உங்கள் பயணம் தொடரும். எமது தேசத்தின் விடுதலை வரலாறு நாளை எங்கள் கதையைச் சொல்லும். அப்போது எங்கள் இனமும் பெண்கள் சமுதாயமும் தலைநிமிர்ந்து நிற்கும். இதயத்தில் தங்கி நிற்கும். எமது இலட்சிய வேங்கைகளுக்கு எமது வீர வணக்கங்கள்.

**புலிகளின் தாகம் !** **தமிழீழத் தாயகம் !!**

**(தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படைப் பிரிவு வெளியிட்ட துண்டுப் பிரசுரத்திலிருந்து )**

www.tamilarangam.net



# விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் தமிழீழம்

## புலிக்கொடிகளைப் பறக்கவிட்டு மக்கள் ஆரவாரம்

இந்திய - இலங்கை அமைதி உடன்படிக்கை ஈழத்தமிழர்கள் மீது திணிக்கப்பட்டு ஒன்றரை இலட்சம் இந்திய ஆயுதப் படையினரின் அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்படுவதற்கு முன்னர், தமிழீழத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் மட்டும் தான் விடுதலைப் புலிகளின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்தன.

ஆனால் உள்ள உறுதியுடன் இந்தியப் படையினருடன் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இரண்டரை ஆண்டு யுத்தத்தின் பின் இன்று தமிழீழம் முழுவதையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றும் நிலை உருவாகியிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் இராணுவ, இராஜதந்திர நடவடிக்கைகளுக்கு முன்நிற்க முடியாமல் இந்தியப் படை தமிழீழத்தைவிட்டுத் திரும்பிச் செல்வதற்கு சிறீலங்கா அரசுடன் மறு உடன்படிக்கை செய்து கொண்டதன் பின் தமிழீழத்தின் நிகழ்வுகள் செய்திக் குறிப்புகளாகவும் படக்குறிப்புகளாகவும் கீழே தரப்பட்டுள்ளன.

* 1989 செப்டம்பர் 18-ந் தேதி இந்திய-இலங்கை அரசுகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்து ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டன.

* அக்கூட்டறிக்கையின்படி செப்டம்பர் 20-ந் தேதி முதல் யுத்த நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது.

* யுத்த நிறுத்தத்தை அவதானிக்க ஏற்படுத்தப்படும் அமைதிக்குழுவில் தாம் சேர்வதானால் சட்டவிரோதமான T. N. A. கலைக்கப்படவேண்டும் என விடுதலைப் புலிகள் அறிவித்தார்கள்.

* ஆனால், T. N. A. என்று ஒரு படை கிடையாது என்று மறுத்துரைத்த ஈ. பி. ஆர். எல். எப். இனர் விடுதலைப் புலிகள் பங்குபெறாவிட்டால் அமைதிக் குழுவில் தாங்களும் பங்குபெறப் போவதில்லை எனக் கூறி அமைதிக் குழுவில் பங்குபெற மறுத்துவிட்டனர்.

* யுத்த நிறுத்த காலத்தில் தேடுதல் வேட்டையில் இறங்கிய I. P. K. F. விடுதலைப் புலிகளை வலுச்சண்டைக்கு இழுத்தது.

* அதே நேரம் ஈ. பி. ஆர். எல். எப். இனர் பல பொதுமக்களைக் கொன்றுவிட்டு பழியை விடுதலைப் புலிகள் மீது சுமத்தினர்.

* யுத்த நிறுத்தம் ஏற்பட்ட மறுதினமே யாழ் பல்கலைக் கழக மருத்துவத்துறைப் பேராசிரியர் டாக்டர் ரஜனி திரணகமவை ஈ. பி. ஆர். எல். எப். இனர் கொன்றுவிட்டு விடுதலைப் புலிகள் தான் கொன்றதாக பழி சுமத்தினர். அதற்கு அவர்கள் கூறிய காரணம் விடுதலைப் புலிகள் கேட்டபோது திலீபனின் சடலத்தைத் திருப்பிக் கொடுக்க ரஜனி மறுத்தார் என்பதே.

* திலீபனின் விருப்பத்தின் பேரில் விடுதலைப் புலிகளால் யாழ் மருத்துவ பீடத்திடம் கையளிக்கப்பட்ட திலீபனின் உடலை இரண்டு ஆண்டுகள் கழித்து திரும்பத் தரும்படி விடுதலைப் புலிகள் கேட்டதாகவும் அதைக் கொடுக்க மறுத்ததாலேயே ரஜனியை விடுதலைப் புலிகள் கொன்றுவிட்டதாகவும் ஈ. பி. ஆர். எல். எப். இனர் கூறுகின்றனர்.

www.tamilarangam.net



* பேராசிரியர் ரஜனி இந்திய அமைதிப்படையின் மனித உரிமை மீறல்களை அம்பலப் படுத்தியதுடன், ஈ.பி.ஆர்.எல்.எப். இனரின் ஆட்கடத்தல், கட்டாய இராணுவப் பயிற்சி, அடக்குமுறை இவைகளையும் கடுமையாக விமர்சித்து வந்ததனால் ஆத்திரமுற்ற E.P.R.L.F. இனர், I.P.K.F. இனரின் அனுசரணையுடன் திட்டமிட்டே அவரைக் கொன்றுள்ளனர். ஒரே கல்லில் இரண்டு மாங்காயை அடிப்பது போல, E. P. R. L. F. இனர் தமது நடவடிக்கைகளுக்கு எதிராக கருத்து வெளியிட்டு வந்த பேராசிரியர் ரஜனியைக் கொன்றுவிட்டு பழியை விடுதலைப் புலிகள் மீது போட்டனர்.

* திலீபனின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தையிட்டு தமிழீழம் முழுவதும் விடுதலைப் புலிகளின் வேண்டுகோளின் பேரில் சிறப்பு நிகழ்ச்சிகளை பொதுமக்கள் எழுச்சியுடன் நடத்தினர்.

* யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் 20-9-89 முதல் 26-9-89 வரை இந்த சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்திய பொதுமக்கள் தமிழ் ஈழத்தில் பல இடங்களில் E. P. R. L. F. இனராலும் I. P. K. F. இனராலும் தாக்கப்பட்டனர். பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

* யாழ் மாவட்டத்தில் பண்டத்தரிபபு என்ற இடத்தில் திலீபன் நினைவு நாள் நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்த பொது மக்களில் ஐவரை I. P. K. F. இனர் சுட்டுக் கொன்றதுடன் அச்சம்பவத்தையிட்டு அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் புலிகளுக்கும் இந்தியப்படையினருக்கும் இடையில் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் ஒரு சிவிலியனும், ஒரு விடுதலைப் புலியும் கொல்லப்பட்டனர் என்று அறிவித்தனர்.

* அதே நாட்களில் இந்தியப் படையினரால் சிறை பிடித்து வைக்கப்பட்டிருந்து விடுவிக்கப்பட்ட பாலேந்திரன், செந்தில் ஆகிய இரண்டு இளைஞர்கள் விடுவிக்கப்பட்ட 10 நிமிடங்களுக்குள் E.P.R.L.F. இனரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

* யக்கச்சியைச் சேர்ந்த தர்ம குலேந்திரன் என்ற இளைஞர் E.P.R.L.F. இனரால் படுகொலை செய்யப்பட்டார்.

* திலீபனின் இரண்டாவது ஆண்டு நினைவாக விளம்பரங்களை வெளியிட்டதற்காக தமிழ்ப் பகுதியிலிருந்து வெளி வந்துகொண்டிருந்த ஈழநாடு, முரசொலி, உதயன் ஆகிய மூன்று தினசரிப் பத்திரிகைகளையும் E. P. R. L. F. இனர் தடை செய்தனர்.

* அதுமட்டுமல்ல. கொழும்பில் வெளியிடப்பட்டு தமிழ்ப் பகுதிகளுக்கு வந்துகொண்டிருந்த வீரகேசரி, டெயிலி நியூஸ் போன்ற ஆங்கில தமிழ் செய்திப் பத்திரிகைகளையும் தமிழ்ப் பகுதிகளுக்குள் வரவிடாது தடுத்தனர். பின்னர் ஈழநாடு பத்திரிகையில் வேலை பார்த்த 18 பேரை (உதவி ஆசிரியர்கள் உட்பட) ஆயுத முனையில் கட்டாயமாகக் கடத்திச் சென்ற E.P.R.L.F. இனர் அவர்களை வைத்து ''விடுதலை'' என்ற பெயரில் தமது கட்சிக்காக ஒரு பத்திரிகையை நடத்திவருகின்றனர்.

* யாழ் நகரில் சிறப்பாக இயங்கிவந்த பிரபல்யமான விவேகானந்தா அச்சகம், விஜயா அச்சகம் ஆகியவற்றினுள் புகுந்து அங்கிருந்த அச்சு யந்திரங்களைக் கொள்ளையடித்துச் சென்ற E.P.R.L.F. இனர், அவற்றையும் மூன்று பத்திரிகை அலுவலகங்களில் கொள்ளையடித்த காகிதங்கள் மற்றும் இயந்திரங்கள் உபகரணங்களை வைத்தே யாழ்ப்பாணம் அசோகா ஒட்டலிருந்து தமது பத்திரிகையை நடத்திவருகின்றனர்.

* இலங்கை அரசுடன் செய்துகொண்ட அமைதி உடன்படிக்கையின்படி வடகிழக்கு மாகாணசபையின் போலீஸ் நிர்வாகத்துக்கு உதவியாக ஒரு மக்கள் தொண்டர் படையை (C. V. F.) ஏற்படுத்தி அதற்கு பயிற்சி கொடுக்கும் பணியையும் தாம் ஏற்றுக்கொள்வதாகக் கூறிச் செயற்பட்ட இந்தியப்படையினருக்கு, C. V. F. என்ற பெயரில், இலங்கை அரசுக்குக்கூடத் தெரியாமல் இரகசியமாக T. N. A யை அமைத்துப் பயிற்சி கொடுப்பது இலகுவாக இருந்தது.

* இலங்கை அரசின் அனுமதியுடன் தான் C. V. F. ஐ அமைத்தோம். அதற்கு உதவியாக A. C. V. F. அமைத்திருப்பதாக E. P. R. L. F. இனர் தற்போது கூறி வருகின்றனர். C. V. F. என்பது மாகாண போலீஸ் படைக்கு உதவியாக செயற்படும் தொண்டர்படை என்ற அடிப்படையிலேயே இலங்கை அரசு C. V. F. ஐ அமைக்கவும் அதற்கு தொண்டர்படைக்கான சாதாரண பயிற்சியை அளிக்கவும் அனுமதி கொடுத்தது. C. V. F. போலீஸ் படையை விடக்குறைந்த அதிகாரங்களைக் கொண்டது. அதனால்தான் C V F க்கு ஆட்களைத் திரட்டும் பணியைக்கூட

இலங்கை அரசு மாகாணசபையிடமும் இந்தியப்படையிடமும் விட்டிருந்தது.

* மாகாணப் போலீஸ் படைக்கு ஆட்களைச் சேர்க்கும் அதிகாரத்தைக்கூட முழுமையாக மாகாணசபையிடம் கொடுக்க முன்வராத இலங்கை அரசு, போலீஸ் படைக்கு ஆள் சேர்ப்பதற்கு 3 பேர் கொண்டகமிட்டியை நியமித்து அதில் மத்திய அரசு சார்பில் இருவரும் மாகாணசபை சார்பில் ஒருவரும் இருக்க வகை செய்திருந்தது.

* மாகாணசபை C. V F. பயிற்சிக்கு இளைஞர்களை விண்ணப்பிக்கும்படி பத்திரிகைகளில் விளம்பரங்களைச் செய்தது. இந்தியப்படையும் ஆங்காங்கே C. V F. பயிற்சிக்குச் சேரும்படி கோரி துண்டுப் பிரசுரங்களை மக்களுக்கு வினியோகித்தது. ஆனால் யாரும் தாமாக C. V. F. இல் சேருவதற்கு விண்ணப்பிக்கவோ முன்வரவோ இல்லை.

* அதனால்தான் கட்டாயமாக ஆட்களைப் பிடித்து பயிற்சிகொடுத்தார்கள். மாணவர்களை கல்விக்கூடங்களுக்குச் செல்லும் வழியில் இவர்கள் பிடித்துச் சென்றதால் பெற்றோர் மாணவர்களை கல்விக்கூடங்களுக்கு அனுப்பவில்லை. இதனால், சிங்கள இராணுவத்துடன் கடுமையான யுத்தம் நடைபெற்ற காலங்களில்கூட தடைப்படாத தமிழ் மாணவர் கல்வி I.P.K.F., E.P.R.L.F. நடவடிக்கைகளில் முற்றாகத் தடைப்பட்டது.

* இலங்கை அரசு அனுமதித்த எண்ணிகைக்கும் அதிகமான இளைஞர்களுக்கு போலீஸ் பயிற்சிக்கும் மேற்பட்ட இராணுவப் பயிற்சியை, நவீன ஆயுதங்களைக் கையாளும் பயிற்சியை இந்திய அமைதிப் படை அளித்தது.

* மாகாணசபைக்கு முறைப்படி போலீஸ் படை அமைப்பதற்கான அதிகாரத்தைக் கூட இலங்கை அரசிடமிருந்து பெற்றுக் கொடுக்க முடியாத இந்திய அரசு இலங்கை அரசை ஏமாற்றி, இலங்கை அரசுக்குத் தெரியாமல் இரகசியமாக T. N. A. யை அமைத்தது

* அந்த T. N. A. க்கு எண்ணிக்கைக்காக ஆட்களை இந்திய அரசு சேர்த்ததே தவிர சேர்க்கப்பட்டவர்களின் திறமை, தகுதி, ஒழுக்கம், கட்டுப்பாடு எதையும் பற்றிச் சிந்திக்கவேயில்லை! அதனால்தான் மாலைத்தீவில் கூலிப்படையாகச் செயற்பட்டு ஆட்சியைக் கவிழ்க்க முயன்ற PLOTE குழுவினரையும்கூட T. N. A. யில் சேர்த்து பயிற்சியும் ஆயுதமும் கொடுத்தது இந்திய அரசு.

* PLOTE க்குப் பயிற்சியும் ஆயுதமும் கொடுத்ததன் மூலம் ஈழத்தமிழ் மக்களை மட்டுமல்ல. மாலைத்தீவையும்கூட இந்திய அரசு ஏமாற்றியிருக்கிறது.

* சதிப் புரட்சியினரைப் பிடித்து மாலைத் தீவு அரசைக் காப்பாற்றுவது போல ஒரு பக்கம் செயற்பட்டுக்கொண்டு மறு பக்கம் அதே குழுவினருக்குப் பயிற்சியும் அளித்து ஆயுதமும் கொடுப்பதை வேறு என்னவென்று சொல்வது.


* 6 மாதங்களுக்கு முன்னரே 10 ஆயிரம் T. N. A. யினருக்கு பயிற்சியும் ஆயுதமும் வழங்கியிருக்கிறது இந்திய அரசு.

* கடந்த ஆண்டு ஜூலை 29-ம் தேதிக்குப் பின் இந்தியப் படை முகாமை விட்டு வெளியே வந்தால் தாக்கப்போவதாக இலங்கை அதிபர் பிரேமதாசா அறிவித்த வேளையில் E. P. R. L. F. பாராளுமன்ற உறுப்பினர் பிரேமச்சந்திரன், ''ஜூலை 29-ம் தேதிக்குப் பின் சிங்களப்படை முகாம்களை விட்டு வெளியே வந்தால் அதனை எதிர்த்து மோதுவோம்'' என்று அறிவித்ததுடன், ''ஈ.பி.ஆர்.எல்.எப்., டெலோ ஈ. என். டி. எல். எப். போன்ற தமிழ்ப் போராளிகள் அமைப்பைச் சேர்ந்த 10 ஆயிரம் போராளிகள் தக்க ஆயத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். சனிக்கிழமையோ (29-7-89) அல்லது அதற்குப் பிறகோ பாசறையை விட்டு சிங்களத் துருப்புக்கள் வெளியே வருமானால் அவர்களை எதிர்த்து முறியடிப்போம்; பாசறைக்குள்ளேயே பதுங்கும்படி அவர்களை விரட்டியடிப்போம்'' என்றும் கொழும்பில் அவர் தெரிவித்திருக்கிறார்.

* T.N.A. என ஒரு படை கிடையாது என்று வரதராஜப் பெருமாளும் அவர் தம் குழுவினரும் மறுத்து வருகின்றபோதிலும் அவர்களால் வெளியிடப்பட்டு வரும் ''விடுதலை'' என்ற பத்திரிகையிலேயே 27-10-89 அன்று ''அம்பாறை வழிகாட்டுகிறது'' என்ற தலைப்பில் வெளியான தலையங்கத்தில் T.N.A. படை பற்றியும், அப்படை முதலமைச்சர் வரதராஜப் பெருமாளின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகிறது என்றும் அப்படையின் பயிற்சி அணிவகுப்பை E. P. R. L. F. பொதுச் செயலாளர் பத்மநாபா வடகிழக்கு

www.tamilarangam.net

அம்பாறை மாவட்டம் தம்பிலுவில் திருக்கோவில் T.N.A. முகாம்களில் இருந்து விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் ஒரு பகுதி.



www.tamilarangam.net



மாகாண நிதி அமைச்சர் கிருபாகரனும் ஆகியோர் சென்று பார்வையிட்டனர் என்றும் எழுதப்பட்டுள்ளது.

* அதுமட்டுமல்ல. E. P. R. L. F. இன் தலைமைக் குழு உறுப்பினர் கேதீஸ்வரன் கொழும்பில் செப்டெம்பா 13-ந் தேதி பத்திரிகையாளர்களிடம் பேசும் போது ''வடகிழக்கு மாகாணசபையின் செயற்பாட்டைச் சீர்குலைக்க இலங்கை அரசோ, விடுதலைப் புலிகளோ முற்பட்டால் எமது மக்களையும், மண்ணையும் பாதுகாக்க எங்கள் ஆயுதப் படையினர் போராடுவார்கள். எங்கள் தொண்டர் படை, தமிழ் தேசியப் படையாகச் செயற்படும்'' என்று கூறியிருக்கிறார்.

* அப்போது தமது தொண்டர் படைக்கு ஆட்சேர்த்ததில் இளைஞர்கள் மீது நிர்ப்பந்தம் செலுத்தப்படுவதாகக் கூறப்படுவதை கேதீஸ்வரன் மறுத்தபோதிலும், யாழ்ப்பாணத்தில் இருந்து பிடித்துச் சென்ற 5000 இளைஞர்களில் 350 பேர் மட்டுமே தமது படையில் சேர முன் வந்ததை பத்திரிகையாளர்கள் முன் அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

* வடகிழக்கு மாகாணசபைக்கு தனிப் படையையும், போலீஸ் நிர்வாகத்துக்கு வேண்டிய அதிகாரங்களையும் முறையாக இலங்கை அரசிடமிருந்து வாதாடிப் பெறவோ அல்லது பெற்றுத் தரும்படி இந்திய அரசை வற்புறுத்தவோ வக்கற்றிருந்த வரதராஜப் பெருமாள் குழுவினர் தாம் கட்டாயமாகச் சேர்த்த படையினருக்கு இந்தியப் படையினர் கொடுத்த ஆயுதப் பயிற்சியையும், ஏராளமான நவீன ஆயுதங்களையும் வைத்துக்கொண்டு இலங்கை இராணுவத்தையும், விடுதலைப் புலிகளையும் சமாளித்துவிடலாம் என்று அம்பாறை மாவட்டத்திலிருந்து இந்தியப் படை வெளியேறியவுடன் மண் குதிரையை

**E.P.R.L.F. இனரால் கொல்லப்பட்ட முஸ்லீம் போலிசார் 39 பேர்**



ஐ சம்சுதீன்
வயது 22
நிந்தவூர்



யூ எல் ஆதம்லெவ்வை
வயது 24
நிந்தவூர்



எம் ஏ றசூல்
வயது 22
சம்மாந்துறை

## படம் இல்லாதவர்கள்

★ ஏ ஏ மனூப்
வயது 23
மாளிகைக்காடு / கல்முனை

★ எம் ஏ புகாரி
வயது 22
சம்மாந்துறை

★ வை ஏ றசூல்
வயது 23
சாய்ந்தமருது / கல்முனை

★ ஐ முனாஸ்
வயது 19
சம்மாந்துறை

www.tamilarangam.net



ஐ எல் ஏ றஹீம்
வயது 23
நிந்தவூர்



எச் முஸ்தபா
வயது 21
நிந்தவூர்



ஐ இப்றுலெவ்வை
வயது 22
சம்மாந்துறை



எம் றபீக்
வயது 23
சம்மாந்துறை



எஸ் எல் நாஸீர்
வயது 25
சாய்ந்தமருது / கல்முனை



எம் எல் ஜனூபர்
வயது 23
சாய்ந்தமருது / கல்முனை



ஏ சீ எம் நவாஸ்
வயது 20
சம்மாந்துறை



எம் நாசர்
வயது 18
சம்மாந்துறை



எம் சல்பியார்
வயது 23
சம்மாந்துறை



ஏ றசீன்
வயது 18
சம்மாந்துறை



ஐ அலியார்
வயது 23
சம்மாந்துறை



ஏ எம் காலிதீன்
வயது 19
சம்மாந்துறை



யூ பாறூக்
வயது 22
சம்மாந்துறை



ஏ எல் நியாஸ்தீன்
வயது 22
சம்மாந்துறை



எம் ஏ ஆதம்பாவா
வயது 25
சம்மாந்துறை



வை அபூபக்கர்
வயது 23
சம்மாந்துறை

www.tamilarangam.net



ஏ எம் முர்சலீன்
வயது 21
சம்மாந்துறை



ஏ சலீம்
வயது 22
சம்மாந்துறை



ஏ எல் றசீட்
வயது 23
சம்மாந்துறை



ஏ எம் முஸம்மில
வயது 22
சம்மாந்துறை



எம் அமீர் அலி
வயது 23
சம்மாந்துறை



ஐ எல் நூர்தீன்
வயது 23
நிந்தவூர்



ஐ எல் நூர்முகம்மட்
வயது 25
நிந்தவூர்



எம் ஏ மன்சூர்
வயது 20
சம்மாந்துறை



எம் நவ்ஹாத்
வயது 23
சம்மாந்துறை



ஏ சம்சுதீன
வயது 21
சம்மாந்துறை



ஏ எல் மீராமுகைதீன்
வயது 20
சம்மாந்துறை



எம் மதநைாஹிர்
வயது 20
சம்மாந்துறை



ஏ. கலந்தர்லெவ்வை
வயது 20
சம்மாந்துறை



கே எம் லாஹீர்
வயது 22
சம்மாந்துறை



எம் ஐ அசசிமுகம்மட்
வயது 23
சம்மாந்துறை



ரி ஆதம்பாவா
வயது 23
சம்மாந்துறை

www.tamilarangam.net



நம்பி ஆற்றில் இறங்கியது போல தமது படையை களத்தில் இறக்கினர்.

* தம்மைப் போலவே I.P.K.F. இனரிடம் பயிற்சி பெற்றிருந்த ஈரோஸ் இயக்கத்தினரைத் தங்களுடைய படையில் சேருமாறும் இல்லையேல் 24 மணி நேரத்துக்குள் அம்பாறை மாவட்டத்தை விட்டு வெளியேறிவிடும்படியும் E.P.R.L.F. இனர் மிரட்டினர்.

* இத்தகவலை ஈரோஸ் தரப்பினர் வெளியிட்டதன் மூலம் I. P. K. F. இனரை ஒருபுறம் விமர்சித்துக்கொண்டு மறுபுறம் அதே I.P.K.F. இனரிடம் அவர்கள் பயிற்சி எடுத்தது பகிரங்கமாகியிருக்கிறது.

* சட்டவிரோதமாக, மக்கள் விரோதமாக செயற்பட்ட E.P.R.L.F., E.N.D.L.F., TELO குழுக்களது T.N.A. யின் அக்கரைப்பற்று, திருக்கோவில் ஆகிய முகாம்களைத் திடீரெனத் தாக்கியழித்த விடுதலைப் புலிகள் அங்கிருந்து அப்படைக்கு இந்தியப் படையினரால் வழங்கப்பட்ட மிக நவீனமான ஏராளமான ஆயுதங்களையும் கைப்பற்றினர்.

* அதன் பின்னர்தான் சட்டவிரோதமான T.N.A. அம்பலத்துக்கு வந்தது. E.P.R.L.F., E.N.D.L.F., PLOTE, TELO ஆகிய குழுக்களைச் சேர்ந்தவர்களையும், கட்டாயத்தின் பேரில் சேர்க்கப்பட்ட இளைஞர்களையும் கொண்டதுதான் தமிழ்த் தேசிய இராணுவம் (T.N.A). இந்தியப் படைதான் அந்த இராணுவத்துக்குக் கட்டாயமாக ஆள் சேர்த்து இராணுவப் பயிற்சியும், நவீன ஆயுதங்களையும், படையைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் மாதம் 3000 ரூபாய் சம்பளம் மற்றும் வசதிகளையும் செய்து கொடுத்தது என்று கூறப்பட்டபோது கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் அதை மறுத்து வந்தது.

* ஆனால் விடுதலைப் புலிகள் T.N.A. யின் முகாம்களைத் தாக்கி அங்கிருந்து கைப்பற்றிய (இந்தியாவால் கொடுக்கப்பட்ட) நவீன ஆயுதங்கள் இந்தியப் படையின் கட்டுப்பாட்டின் கீழ் இரண்டு ஆண்டுகளாக இருந்த அம்பாறைக்கு எப்படி வந்தது என்ற கேள்வியிலிருந்தே இந்திய தரப்பு - வரதராஜப் பெருமாளின் கூட்டுச் சதி அம்பலத்துக்கு வந்தது.

* தாம் வெளியேறும் சூழ்நிலை ஏற்படும்போது விடுதலைப் புலிகளின் படையைவிட ஆட்களிலும், ஆயுதங்களிலும் அதிகமாகக் கொண்ட படையொன்றை ஏற்படுத்தினால் அதன் மூலம் விடுதலைப் புலிகளின் வளர்ச்சியைத் தடுக்கலாம், தாம் ஏற்படுத்திய பொம்மை அரசைத் தொடர்ந்து காப்பாற்றலாம் என எண்ணித்தான் இந்தியப்படையினர், அகப்பட்ட இளைஞர்களையெல்லாம் கடத்தி வந்து பயமுறுத்திப் பணியவைத்து பயிற்சி கொடுத்து தமிழ் தேசிய இராணுவத்தை (T. N. A.) உருவாக்கினர்.

* அந்த இரகசியப் படையின் தைரியத்தில்தான் வரதராஜப் பெருமாளும் தனி ஈழம் பிரகடனப் படுத்தப்போவதாக அப்போது அறிவித்தார்.

* இலங்கை மாகாண போலீஸ் படைக்கு துணையாகச் செயற்படுவதற்காக அமைக்கப்பட்ட E.P.R.L.F குழுவினரின் படை, அம்பாறை மாவட்டத்தை விட்டு இந்தியப் படை விலகியதும் அங்குள்ள கல்முனை, சவளக்கடை, காரைதீவு, சம்மாந்துறை, அக்கரைப்பற்று ஆகிய மாகாண போலீஸ் நிலையங்களைச் சுற்றி வளைத்துத் தாக்கியது.

* தமது மாகாணசபை அதிகாரத்தின் கீழ் செயற்பட்ட, தமிழ் பேசும் மக்களை அதிகமாகக் கொண்ட போலீஸ் நிலையத்தின் மீது E. P. R. L. F. இனர் தாக்குதலை நடத்தியதன் மூலம் தமது நடவடிக்கைகளின் உள்நோக்கத்தை வெளிக்காட்டினர்.

* இதில் காரைதீவில் மட்டும் 43 முஸ்லீம் போலீசார் சுட்டுக் கொல்லப்பட்டனர். முஸ்லீம்களை ஆத்திரமூட்டித் தூண்டிவிட்டு கலவரத்தை ஏற்படுத்தினால் அதைச் சாட்டாக வைத்துக்கொண்டு இந்தியப் படையை மேலும் அங்கு நிலைகொள்ள வைக்கலாம் என்பது இந்திய ஈ. பி. ஆர். எல். எப். குழுவினரின் கூட்டுச் சதித் திட்டம். இந்திய - ஈ. பி. ஆர். எல். எப். இனரின் இந்தச் சதி முயற்சிகளையும் உள்நோக்கங்களையும் முஸ்லீம் மக்கள் நன்கு அறிந்து வைத்திருந்ததனால் பெரும் கலவரம் எதுவும் அங்கு ஏற்படவில்லை.

* இலங்கை அரசைச் சீண்டி சிங்கள தமிழ் இனக் கலவரத்தை ஏற்படுத்தினால் அதுவும் இந்தியப் படை தமிழ்ப் பகுதியில் தொடர்ந்து நிலைகொள்வதற்குக் காரணமாக அமைந்துவிடும் என்று கருதிய E. P. R. L. F. இனர்; மன்னாரில் 3 அரசு அதிகாரிகளைக் கடத்திச் சென்று சுட்டுக் கொன்றனர்.

www.tamilarangam.net



* இதனால் இலங்கை அரசு ஆத்திரமுற்று தன் படையை ஏவி தமிழர்களைத் தாக்கும். கலவர சூழ்நிலை உருவாகும். இந்தியப் படை தொடர்ந்து நிலைகொள்வதற்கு அதையும் ஒரு காரணமாகக் கூறலாம் என்று எண்ணியே ஈ.பி.ஆர்.எல்.எப். இனர் அந்த அரசு அதிகாரிகளைச் சுட்டுக் கொன்றனர்.

* இந்நிலையில் நிர்ப்பந்தம் காரணமாக T.N.A., C.V.F. இல் சேர்ந்துள்ள இளைஞர்களுக்கு அவர்களின் பாதுகாப்புக்கு உறுதி கூறி தம்மிடம் சரணடையும்படி விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்தனர். பின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர்கள் T.N.A.. C.V.F. மற்றும் இயக்கங்களை விட்டு ஆயுதங்களுடன் புலிகளிடம் சென்று சரணடைந்துள்ளனர்.

* அவ்வாறு சரணடைந்த இளைஞர்களிடமிருந்து ஆயுதங்களை விடுதலைப் புலிகள் பெற்றுக்கொண்டு அந்த இளைஞர்களை அவர்களது பெற்றோர்களிடம் பாதுகாப்பாக நேரடியாக ஒப்படைத்து வருகின்றனர்.

* இந்தியப் படை வெளியேறிய அம்பாறை, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய ஆறு மாவட்டங்கள் தற்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளன.

* தமது தோல்வியை மறைப்பதற்காக E.P.R.L.F உம் அதன் தோழமைக் குழுக்களும் தமது படை தினசரி விடுதலைப் புலிகளையும் சிங்கள இராணுவத்தையும் பெருமளவில் தாக்கி அழித்து வருவதாகக் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

* அத்துடன் I.P.K.F. இனர் தமக்கு வழங்கிய ஆயுதங்கள், பயிற்சிகள் பற்றியும், தம்மோடு அவர்கள் சேர்ந்து நடத்தும் தாக்குதல்கள் பற்றியும் குற்றச்சாட்டுகள் வெளிவருவதற்கு முன்னர் E.P.R.L.F இனர் தாமாகவே முந்திக்கொண்டு "சிங்கள அரசு விடுதலைப் புலிகளுக்கு பெருமளவு நவீன ஆயுதங்களை வழங்குகிறது", "விடுதலைப் புலிகளுக்கு சிங்களப் படை பயிற்சியளிக்கிறது", "விடுதலைப் புலிகளோடு சேர்ந்து சிங்களப் படை தாக்குதல் நடத்துகிறது" என்று கோயபல்ஸ் பாணியில் அறிக்கைகளை வெளியிட்டுக்கொண்டிருக்கின்றனர்.

கடந்த மார்ச் மாதம் வரதராஜப்பெருமாள் டெல்லிக்குச் சென்றபோது ஈழத்தில் புலிப் படை முறியடிக்கப்பட்டதாகவும் வெறும் 750 புலிகள் மட்டும் காட்டுக்குள் பதுங்கி இருப்பதாகவும் கூறியிருந்தார்.

* ஆனால் இன்று அவரதும், அவரது தோழமைக் குழுக்களதும் படைகள் கடந்த 3 மாதத்துக்குள் தாம் தாக்கிக் கொன்று குவித்ததாக அறிவித்திருக்கும் புலிகளின் எண்ணிக்கை 750 யும் தாண்டிவிட்டது.

* விடுதலைப் புலிகளையும் இலங்கை அரசுப் படைகளையும் தமது படை வெற்றிகரமாக முறியடித்து வருவதாக வீராப்பு அறிக்கைகளை வெளியிடுபவர்கள், தமிழ் மக்களுக்கு தாங்கள் பாதுகாப்பு வழங்கமுடியும் என்று கூறுபவர்கள் மறுபுறம் ஏன் இந்தியப்படை திரும்பிச் செல்லக்கூடாது என்று அலறுகிறார்கள் என்பதுதான் புரியவில்லை.

* உலகை ஏமாற்றுவதற்கும், தமது தோல்வியை மறைப்பதற்கும்தான் அவர்கள் இவ்வாறு அறிக்கைகளை விடுகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகிவிட்டது.

* இந்தியப்படை இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இருந்ததைவிட விடுதலைப்புலிகள் இன்று மனோபலம், மக்கள் பலம், ஆயுத பலம் ஆகியவற்றில் பல மடங்கு வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள்.

அன்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைத்தான் விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார்கள். இன்று தமிழீழம் முழுவதையும் விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளனர்.

* கடந்த இரண்டரை ஆண்டுகளாக அந்நியப் படைகளினதும், துரோகப் படைகளினதும் கடுமையான அடக்குமுறைகளினால் பெரிதும் அவதியுற்றிருந்த தமிழீழ மக்கள் இன்று, அந்த அடக்குமுறைகள் உடைத்தெறியப்பட்ட நிலையில் தங்களுக்காக இடைவிடாது போராடி வரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உணர்ச்சிகரமான வரவேற்பளித்து தமிழீழமெங்கும் புலிக் கொடிகளைப் பறக்க விடுகின்றனர்.

* விடுதலைப் புலிகளின் அரசியற் கட்சியான **விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி** மாவட்டம்தோறும் நடத்தி வரும் பொதுக்கூட்டங்களுக்கு ஆயிரக் கணக்கில் அணிதிரண்டு தமது ஆதரவையும் மகிழ்ச்சியையும் தெரிவித்து வருகின்றனர்.

www.tamilarangam.net



# மேஜர். தங்கேஸ்

உயரம் குறைந்த தோற்றம், குள்ளமாக வெட்டப்பட்ட முடியினால் முகத்தில் தோன்றும் அழகு, சக தோழர்களுடன் அன்பாகவும், மகிழ்வுடனும் பழகும் தன்மை, சகல மக்களையும் நேசிக்கும் தன்மை, ஒவ்வொரு போராளி மீதும் காட்டும் கரிசனை, அஞ்சா நெஞ்சத்தின் உறுதி, தெளிந்த சிந்தனை, இவற்றின் மொத்த வெளிப்பாடே முல்லைத்தீவு மாவட்டத்தின் பொறுப்பாளர் மேஜர் தங்கேஸ்.

*1985-ல்......*

தங்கேஸ், ஆரம்பத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் லோறன்சின் தலைமையில் போராடுவதற்காக இணைந்து கொண்டான். அக்காலத்தில் சிறீலங்கா இராணுவத்தினருடனான பல தாக்குதல்களில் பங்கேற்றான். காப்டன் லோறன்சின் வீரமரணத்தின் பின்பு, மேஜர் தாடிபாலாவின் தாக்குதற் பிரிவில் ஒருவனாக செயற்பட்டான்.

*1986-ல்......*

தமிழீழ மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கத்தோடு, சிங்கள இராணுவத்தினரின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக, கிளிநொச்சி இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான தாக்குதல்களில், தங்கேஸ் தீரமுடன் போராடினான். அத்தாக்குதல்களில் பல இராணுவத்தினரின் இழப்புகளின் பின்பு இராணுவத்தினர் முகாமிற்குள் முடங்கினர்.

இதன் பின்பு முல்லைதீவு மாவட்டத்தில் மீண்டும் தங்கேஸ் செயற்படத் தொடங்கினான். மேஜர் சிலனின் தலைமையில் சிறீலங்கா இராணுவத்தின் மீதான பல வீரமிக்க தாக்குதல்களில் பங்கு பற்றினான்.

* முல்லைத்தீவு நகரில் நடந்த சிறீலங்கா இராணுவத்தினருடனான தாக்குதல்.
* நிராயிப்பிட்டியில் 7 இராணுவத்தினருக்கு மேல் கொல்லப்பட்டு, பலர் படுகாயம் அடைவதற்கு காரணமாக இருந்த தாக்குதல்.
* முந்திரிகைக்குளத்தில் 21 இராணுவத்தினர் கொல்லப்பட்டு, 14-A.K.47 துப்பாக்கிகள் கைப்பற்றிய தாக்குதல்.
* பூநகரி இராணுவ முகாம் தாக்குதல் ஆகியவற்றிலும், மற்றும் பல தாக்குதல்களிலும் 1986—1987 ஆகிய காலகட்டங்களில் பங்கு பற்றி தனது திறமையையும், வீரத்தையும் உறுதிப் படுத்தினான்.

*இக்காலங்களில்......*

தங்கேஸ், வேவு நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்டான். முல்லைத்தீவு இராணுவமுகாம்; ஒரு புறத்தே கரைகுடியிருப்பு எனும் சிறு கிராமத்தையும் ஏனைய பகுதிகளில் மனித நடமாட்டமற்ற தடை செய்யப்பட்ட வெளிகளையும் கொண்டது. அதன் அயற்புறத்தே, அரச உளவாளிகளும், துரோகிகளும் தாராளமாக உலவினார்கள், எந்நேரமும் விழிப்புணர்வுள்ள இந்த இராணுவ முகாமைச் சுற்றியே எந்நேரமும் தங்கேஸ் நின்றான்.

வேவு பார்த்தல் என்பது இலகுவானதல்ல. இராணுவ முகாமை நெருங்கி பார்ப்பதுடன், எதிரியின் கண்களில் படாமல் சூழலுடன் ஒன்றியும் போய்விடவேண்டும். இதில் தங்கேஸ் மிக வல்லுனனாக இருந்தான்.

அந்த இராணுவ முகாமின் அமைப்புடன், இராணுவத்தினரது நடமாட்டங்களையும் நன்கு அறிந்திருந்தான். இதனால்தான் லெப். கேணல் நவத்துடன் இணைந்து இப்பகுதியில் மிதிவெடிகள், பொறிவெடிகள் மூலம் பல தாக்குதல்களை நடத்தினான். எமக்கு சாதகமற்ற அப்பகுதிகளில் பல ஆபத்துக்களையும் அவர்கள் சந்தித்தனர். ஒருமுறை தங்கேசும், நவமும் இராணுவ முகாமின் அருகிலுள்ள இராணுவக் காவல் நிலையின் கீழ் கண்ணிவெடியை வைத்து வெடிக்க வைப்பதற்காக மின் வயர்களை சற்று தள்ளி உள்ள வீட்டின் வேலி ஓரம் வரை நிலத்துக்கு கீழாக கொண்டு சென்று, 'பட்டனை' இயக்கியவுடன் வெடிக்கக்கூடிய மாதிரி வைத்தனர். நள்ளிரவில் இதனை செய்துவிட்டுத் திரும்பினர்.

காலை இராணுவத்தினர் காவல் நிலைக்கு வந்தனர். வெடிக்க வைக்கும் கருவிக்கு அருகில் சென்ற தங்கேஸ் பட்டினை இயக்கினான் வெடிக்கவில்லை, வயர்கள்

www.tamilarangam.net



துண்டுப்பட்டுக் கிடந்தன. இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடியே தங்கேசை நோக்கி ஓடிவந்தனர். அவ்வீட்டுக்காரன் வயர்களையும் துண்டித்துவிட்டு, இராணுவத்தினரிடமும் கூறிவிட்டான் என்று பின்புதான் தெரிந்தது. அல்லது அக்காவலரண் சிதறி இருக்கும். பின்பு ஒருநாள் அதே காவலரணை தாக்குவதற்காக எம்மவர்கள் சென்றனர். நள்ளிரவு நேரம், விடிந்த பின்பு தாக்குதல் நடாத்த வேண்டும். ஒரு வீட்டிற்கு அருகில் செல்கையில், அவ் வீட்டுக்காரன் மின் விளக்குகளை எரியச் செய்தபடியே எம்மை நோக்கி ஏதோ பேசினான். நாம் அமைதியாக முன்னேறினோம். ஆனால் ஏற்கனவே தற்செயலாக அங்கு பதுங்கி இருந்த இராணுவத்தினர், அவதானம் அடைந்து, நாம் வீதியில் இறங்கியவுடன் தாக்கத் தொடங்கினார்கள், எம்மவர்களும் திருப்பித் தாக்கியபடியே பின்வாங்கினர். இப்படி நித்தமும் அவர்கள் ஆபத்துகளை தாண்டியபடியே ......இருந்தனர்.

காலப்போக்கில் ஆயுத தளவாடங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு தங்கேசிடம் ஒப்படைக்கப்பட்டது. மிக இரகசியமாக செய்யப்படவேண்டிய இவ்வேலையை மிகவும்பொறுப்புடன் இரவு பகலாக கடமையுணர்வுடன் செய்தான்.

சிறு வயது முதலே வாகனங்கள் நிறுத்தும் நிலையத்தில் வேலை செய்தபடியால், தங்கேஸ் மிகச் சிறந்த சாரதியாக இருந்தான், உழவு யந்திரங்களையோ, லாரிகளையோ மிக இலகுவாகவும், ஒழுங்காகவும் செலுத்தக்கூடியவன். தாக்குதல்களுக்கு செல்கையிலும் இவனே வாகனங்களை செலுத்துவான். எமது மக்களுடன் பழகுகையில் மிக்வும் அன்புடன் பழகுவான். அவர்களின் மனமறிந்து அவர்களை மரியாதையுடன் நடாத்துவான். மக்களை போராட்டத்தில் ஒன்றிணைப்பதன் மூலம் எம் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதில் நம்பிக்கை உடையவன். எமது மக்கள் கொல்லப்படுகையிலும் குமுறிக் கொண்டிருப்பான். எத்தாக்குதலுக்கும் கட்டாயமாக எதிர் தாக்குதல் ஒன்று கொடுக்கப் படவேண்டும் என்று கூறிக் கொள்வான்.

இந்திய இராணுவத்தினர், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழிக்கும் நோக்கத்துடன் விடுதலைப் புலிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கையில் இறங்கிய பின்பு யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையுடன் ஏற்பட்ட பெரும் மோதலில், பசீலனின் தலைமையில் கோப்பாய் பகுதியில் இந்தியப் படைமேல் மறக்க முடியாத தாக்குதல் தொடுக்கப்பட்டது. இத்தாக்குதலில் தங்கேசும் பங்கெடுத்துக்கொண்டான்.

**2-11-1987.....**

அதிகாலை நான்கு மணி. அடர்ந்த காட்டை உடைத்துச் செல்லும் அந்தத் தார் வீதியைப் பார்த்தபடியே காட்டுக்குள் தங்கேஸ் விழித்திருந்தான். அவனது அருகில் A.K. 47ஐ இறுகப் பற்றியபடியே அவனது தோழன் இருந்தான். தூரத்தில் இந்திய இராணுவ வாகனங்களின் இரைச்சல் இரவின் மௌனத்தில் பயங்கரமாக ஒலித்துக் கொண்டிருந்தது. இன்னும் ஒரு மணி நேரத்தில் வாகனங்கள் வந்துவிடும், விடிந்துவிட்டால் இலகுவாக இருக்கும் எனக் கூறினான் தங்கேஸ் அந்த மாரி காலத்து இரவின் குளிர் உடலை நடுங்க வைத்துக்கொண்டிருந்தது.

அவர்களிருவரும் ஒட்டிசுட்டானுக்கும், முள்ளியவளைக்குமிடையே கூழாமுறிப்பு எனும் இடத்தில் வீதியில் நிலக்கண்ணிகளை புதைத்துவிட்டு காட்டுக்குள் சற்றுத் தள்ளி, வெடிக்க வைக்கும் கருவியுடன் இருந்தனர். வலப்புறமாக பெரிய வெளி ஒன்று இருந்தது. அதன் வழியே பார்க்கையில் தூரத்தில் வருகையிலேயே வாகனங்கள் தெரிந்துவிடும்.

அதிகாலை 5 மணி, இருள் கலவத் தொடங்கவில்லை. இராணுவ வாகனங்கள் தமது மங்கிய லையிற் வெளிச்சத்தில் மிக மெதுவாக ஊர்ந்தபடியே வந்து கொண்டிருந்தன. அந்த வெளியைக் கண்டவுடன் வாகனங்கள் நின்றன. இந்திய இராணுவத்தினர், இறங்கி உலாவத் தொடங்கினர், காலைக் கடன்களுக்காக காட்டுக்குள் வந்தனர். தங்கேசும், தாழனும் நிலத்துடன் ஒட்டியபடி படுத்து விட்டனர். அவர்களது சிறு அசைவும் அவர்களுக்கு பின்புறமும் முன்புறமும் விளங்காத மொழிகளில் இராணுவத்தினர் கதைத்துக் கொண்டு சென்றனர். இருள் கலையத் தொடங்கியது, இராணுவத்தினன் ஒருவன் ஏதோ வார்த்தைகளில் பலமாக ஆணை பிறப்பித்தான். படையினர் சிலர் வாகனங்களில் ஏறினர், சிலர் வீதியில் கண்ணி வெடிகளை தேடியபடியே முன்னே நடந்தனர். வீதியின் இருபுறத்துக் காடுகளுக்குள்ளாலும் பதுங்கி இருக்கும் போராளிகளைத் தேடியபடியே இரு குழுவினர் சென்றனர். இவர்களை எவரும் காணவில்லை. வாகனங்கள் திரும்பப் புறப்பட்டன. இராணுவத்தினர் அதிகமில்லாத 6 லாறிகள் (ரக்) சென்றன தங்கேஸ் அவற்றை எதிர்பார்த்து காத்திருக்கவில்லை. இந்தியப் படையினரின் மீது நம்பிக்கைக்குரிய

''டாங்கி''யை எதிர்பார்த்திருந்தான். அதை சிதைப்பதன் மூலம் இராணுவத்தினரின் உறுதியைக் குலைக்கலாம். அந்த இராணுவ டாங்கி தனது இரு பக்கத்து செயினின் கோரப் பற்களை அந்தத் தார் வீதியில் பதித்தபடியே முன்னேறியது. யாழ் நகரில் பல உயிர்களின் யேலாக ஓடிய அந்த டாங்கியின் முன் பகுதி நிலக்கண்ணி மேல் ஏறியது. தங்கேஸ் வெடிக்க வைக்கும் கருவியுடன் தயாரானான். டாங்கியின் நடுப்பகுதி கண்ணியின் மேல். அடுத்த கணம், அப்பிரதேசம் அதிர்ந்தது! வீதியின் மறுபுறம் இருந்த வீர மரத்திற்கு மேலாக, டாங்கி சென்று விழுந்தது. அதனுள் இருந்த பதின்மூன்று இராணுவத்தினரும் சிதைந்து விட்டனர். எங்கு என்று தெரியாத இராணுவத்தினர் எதிரி மீது எல்லா இராணுவத்தினரும் சுடத் தொடங்கினார்கள். தங்கேஸ் பின்வாங்கிவிட்டான். அதே வாகனத் தொடரை மாலை ஆறு மணியளவில் மீண்டும் எம்மவர்கள் தாக்கினார்கள். முதல் டாங்கியை இழந்து கோத்பதுடனும் மிகவும் அவதானத்துடனும் அட்டூழியங்கள் செய்து சென்ற அந்த மூவாயிரம் இராணுவத்தினரை கொண்ட இராணுவ ரோந்துப் பிரிவு, மீண்டும் சிலாவத்தை என்னும் இடத்தில் ஒரு டாங்கியை இழந்தது. காப்டன் மகேந்திரன் வெற்றிகரமாக ஒரு டாங்கியைத் தகர்த்து மேலும் ஆறு படையினரை அழித்தான். இதை தொடர்ந்து நடைபெற்ற கடுமையான மோதல்களில் சில நாட்களில் முள்ளியவளை தண்ணீரூற்று எனும் சிறிய இடத்தில் நூற்றுக்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர், ஏராளமான ஆயுதங்கள், வெடி பொருட்கள் கைப்பற்றப்பட்டது. எமது தரப்பிலும் மேஜர். பசீலன், காப்டன் திருச்செல்வம், லெப். அலன், கிரிசாந்தன் ஆகியோர் வீரமரணமடைந்தனர். இக்கடுமையான மோதல்களில் தங்கேஸ், மகேந்தி போன்றோர் தீரமுடன் போரிட்டவர்களுள் அடங்குவர்.

ராகவன், மகேந்தி, தங்கேஸ் ஆகிய மூவரும் மிகவும் நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். அவர்களுக்கு வழங்கப்பட்ட வேலையின் நிமித்தம் எப்பொழுதும் ஒன்றாக இருக்க வேண்டி இருந்தது. ஒட்டுசுட்டானுக்கு அருகிலுள்ள கற்சிலைமடுவில் இவர்கள் மூவரும் ஒரு வீதியால் சென்று கொண்டிருந்தனர். முதல்நாள் இருமுறை இந்திய இராணுவச் சுற்றிவளைப்பிலிருந்து தப்பியதை பற்றி கேலியாக கதைத்தபடியே சென்றனர். காலை நேரம் அதனால் வீதியின் அருகில் பதுங்கி இருந்த இராணுவத்தினரைப் பற்றிய தகவல் கிடைக்கவில்லை. இராணுவத்தினரை மூவரும் நெருங்கியவுடன், இராணுவத்தினர் சுடத் தொடங்கினர், மூவரும் பின்வாக்கி ஓடினர். காப்டன் ராகவனின் நெஞ்சில் துப்பாக்கி ரவை துளைத்துச் சென்றது. நீங்கள் ஓடுங்கள் என்றபடியே தனது பிஸ்டலை எடுத்து படையினரை நோக்கி சுடத்தொடங்கினான். மேலும் சில ரவைகள் இவனைத் துளைத்தன காப்டன் ராகவன் வீரபரணம் அடைந்தான்.

1989 சித்திரையில்,

முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளராக லெப். கேணல் நவம் நியமிக்கப்பட்டார். அதே நேரம் முல்லைத்தீவு மாவட்ட இராணுவப் பிரிவு பொறுப்பாளராக தங்கேஸ் நியமிக்கப்பட்டான். இக்காலகட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில், நெடுங்கேணியில் நடைபெற்ற இந்தியப் படை காவலரண் மீதான தாக்குதல் குறிப்பிடத்தக்கது. அத்தாக்குதலில் பதினெட்டுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டு அவர்களது ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. ஆனால் அத்தாக்குதலுக்கு தலைமை தாங்கிய லெப். கேணல் நவம் வீரமரணமடைந்

தொடர்ச்சி 25ம் பக்கம்

## துரோகப் பெருமாளின் தனி ஈழம்

''இலங்கையின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டையும் காக்க இந்தியா பெரும் விலை கொடுத்துள்ளது. அதேபோல தமிழர்களும் பெரும் விலை தந்துள்ளனர். EPRLF மட்டும் 2000 தொண்டர்களைப் பலி கொடுத்துள்ளது.

ஐக்கிய இலங்கையில் அமைதியோடும், நட்புணர்வோடும் வாழ்வதுதான் தமிழர் விருப்பம். **தனி ஈழம் வேண்டுமென்று நாங்கள் விரும்பவில்லை.** பிரிவினைக் கோரிக்கையைத் தேவையற்றதாக்கும் மாற்று ஒன்றையே நாம் விரும்புகின்றோம்.''

**-டெல்லியில்**
**வரதராஜப் பெருமாள்**
**11-8-89 மக்கள் குரல்**

www.tamilarangam.net



தார். நவத்தின் இழப்பிற்குப் பின்பு, முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளராக மேஜர். தங்கேஸ் நியமிக்கப்பட்டான். எமது தாக்குதற் பிரிவை வலுப்படுத்திய தங்கேஸ் அதே நேரம் அரசியற் பிரிவையும் ஒழுங்குபடுத்தி, இயக்கத்தை மக்களுக்குள் நிலைப்படுத்தினான். இக்காலங்களில் திலீபனின் இரண்டாவது நினைவஞ்சலிக் கூட்டத்தை எம்மவர்கள் நடத்தினார்கள். இந்திய, EP கூட்டுக் கொலைப் படையின் அட்டகாசத்திற்கும், அடக்குமுறைக்கும் மத்தியிலும், முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் அணி திரண்டனர். புலிகளின் மக்கள் பலத்திற்கு இதே ஒரு சிறு உதாரணம் ஆகும்.

இந்நேரத்தில் எமது நிரந்தர முகாம் தாக்கப்படுகிறது.

அச்சிறிய காட்டைச் சுற்றி உள்ள நான்கு படைமுகாம்களிலிருந்தும், இராணுவக் கெலிகாப்டரின் உதவியுடன் செல் (குண்டுத்) தாக்குதல் நடைபெற்றது. அதன்பின் ஆயிரக் கணக்கான இந்தியப் படையினர் காட்டுக்குள் இறங்கினர்.

அன்று தனது குழுத் தலைவர்களோடு தங்கேஸ் பேசிக் கொண்டிருந்தான். எமது முகாம் இன்று தாக்கப்படும். ஆனால் பின்வாங்குதல் என்ற கதைக்கே இடமில்லை. கொல்வதற்கு மட்டுமே பயிற்றப்பட்ட கூலிப் படையினரால், எம்முன் நின்று பிடிக்க இயலாது. இவர்களின் தாக்குதலுக்காக முகாமை விட்டுச் சென்றால், எந்த இடத்திலுமே நாம் இருக்க இயலாது. இன்றைய அடியுடன் காட்டுப் பக்கமே இந்தியப்படை தலை வைக்கக்கூடாது என்று தங்கேஸ் கூறியவுடன், அனைத்துப் போராளிகளும் தயார் நிலையை அடைந்து, நான்கு திசைகளிலும் பலத்த காவல் கண்காணிப்புடன் எதிரியை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். காலை நேரம் அடர்ந்த அந்தக் காட்டின் மறைவிலும், சருகுகளின் சத்தம் இந்தியப் படையினரின் வருகையை தெரிவித்தது. முதலில் ஒரு குழு பலமாக மோதியது; இந்தியப் படை பின்வாங்கி ஓடியது. தொடர்ந்து நான்கு நாட்களாக எமது முகாமை அழிக்கும் நோக்கத்துடன் இந்தியப்படை முயன்றது. எங்கும் கடுமையான எதிர்ப்பும், பலமான தாக்குதலும் தொடர்ந்ததால், இந்தியப்படை பலத்த இழப்புகளுடன் திரும்பியது. எமது மண் எங்கள் காடு. எங்கிருந்தோ வந்த இந்தியப்படையால் எப்படி எம்மைத் துரத்த முடியும்? கற்பழிப்புகளும், காட்டுமிராண்டித்தனங்களுக்கும் பழக்கப்பட்டவர்களால், எழுச்சியடைந்த போராளிகளை எப்படி வீழ்த்த முடியும்?

தங்கேஸ் முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளராகிய பின்பு நடைபெற்ற தாக்குதல்களில் 15-10-1989 அன்று ஒட்டுசுட்டானில் இந்திய இராணுவ வாகனத் தொடர் மீது தாக்குதல் தொடுத்து, 2 வாகனங்களைச் சேதமாக்கி ஐந்துக்கும் அதிகமான படையினரை கொன்று ஆயுதங்களை கைப்பற்றிய தாக்குதலும்,

26-7-1989 அன்று முள்ளியவளையில் தற்காலிக முகாமிட்டிருந்த இந்தியப்படையைத் தாக்கி 7 படையினரை அழித்ததும், முல்லைத்தீவில் இந்தியப் படையினரின் முகாம்களுக்கு நடுவே இருந்து அராஜக ஆட்சி நடாத்திய E P.R.L.F. சமூக விரோதிகளை ஓட விரட்டி அடித்து ஆயுதங்களைக் கைப்பற்றியதும், குறிப்பிடத்தக்கவையாகும். களத்திலே நித்திய அபாயங்களைக் கடந்துவந்த தங்கேஸ் 19-11-89 அன்று முள்ளியவளையில் வித்தியானந்தா கல்லூரிக்கு அருகிலுள்ள மண்பாதையால் வந்து, தார் வீதியில் ஏறினான். ஏற்கனவே இந்தியப் படையினர் அங்கு காவலுக்கு இருந்ததை தங்கேஸ் அறிந்திருக்கவில்லை, அவனது கையிலிருந்த பை தற்செயலாக கீழே வீழ்ந்தது. அதேநேரம் இந்தியப் படையினர் ''கான்ட்ஸ் அப்'' என பலமாக கத்தினார்கள். எம்மவர்கள் என்றுமே கை உயர்த்திப் பழக்கப்படாதவர்கள், சிரித்துக் கொண்டே சைக்கிளை விட்டு இறங்கி பையை எடுக்கக் குனிந்தான். யுத்த நிறுத்தம் அமுலிலிருப்பது அவனுக்குத் தெரியும். அதை இந்தியர்கள் மீறுவார்களென்பதும் அவனுக்குத் தெரியும். எனவே கையிலிருந்த A. K-47 துப்பாக்கியை தயாராகவே வைத்திருந்தான். இந்தியப்படையினன் ஒருவன் ''கீழே கிடப்பதை எடுத்தால் சுடுவோம்'' என்றான்.

''சுட்டால் நானும் திருப்பித் தாக்குவேன்'' என்று சொல்லிக் கொண்டே தங்கேஸ் பையை எடுத்தான்.

இந்திய இராணுவத்தினர் சுடத்தொடங்கினார்கள். முதல் ரவை கால்களைத் தைத்தது. தங்கேசின் துப்பாக்கியும் இயங்கத் தொடங்கியது. கால்களை நொண்டியபடியே தங்கேஸ் பின்வாங்கத் தொடங்கினான். அப்பொழுதும் அவனது A. K-47 இயங்கிக் கொண்டே இருந்தது. மேலும் சில ரவைகள் கழுத்தில், நெஞ்சில்......

மேஜர் தங்கேஸ் தான் நேசித்த மண்ணோடு சங்கமமானான். ★

www.tamilarangam.net



# முல்லை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் காப்டன் தினேஷ்

[ த. தமிழ்செல்வன் 12-8-89 ]

தந்தையாரின் தேசப்பற்றும், அரசியல் ஈடுபாடும் இளவயதினிலேயே இவன் நெஞ்சத்தில் ஊறிவிட்டது. அதனால்தான் பாடசாலைப் பருவத்திலேயே இவன் போராட்டப் பங்களிப்பில் கலந்தான். அரச அடக்குமுறைகளுக்கு எதிராக மாணவர் போராட்டங்களில் கலந்து மாணவர்களை விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக ஒன்றிணைத்தான்.

உயர்தர வகுப்பு மாணவனான தினேஷ், இறுதிப் பரீட்சையை எழுதவில்லை. அது அவனுக்கு அவசியமாகவும் படவில்லை. தன்னின மக்கள் துன்பப் புதைகுழிக்குள் வீழ்ந்து கிடக்கையில், கைகள் கட்டி வேடிக்கை பார்ப்பதற்கு அவன் தயாராக இல்லை. தனது மண்ணை மீட்பதற்காகவும் மக்களின் அடிமை நிலையை மாற்றுவதற்காகவும் உண்மைப் போராளிகளுடன் இணைந்து கொண்டான்.

புலிகளுடன் இணைந்து பயிற்சிக்கு முதலே, பொதுவான சில வேலைகளில் ஈடுபட்டான். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு புதிய போராளிகளை அணிதிரட்டிய தினேஷ், அவர்களுடனேயே பயிற்சி முகாமில், பயிற்சி எடுத்தான். பயிற்சிகளில் இவனது ஈடுபாடும், உறுதியும், இவனது தனித்தன்மையைக் காட்டியது. இவனிடம் இயல்பாகவே இருந்த திறமையின் நிமித்தம், அரசியல் வகுப்புகளின் பின்பு, அரசியல் வேலை செய்வதற்காக; அக்கராயன், வன்னேரிகுளம், சோணாவில் பகுதிகளில் நியமிக்கப்பட்டான். பின்பு,

அவசியத் தேவையின் நிமித்தம், தினேஷ் நெடுங்கேணி பிரதேசத்திற்கு மாற்றப்பட்டான். இங்கு ஆனந்தப் புளியங்குளம், குளவிசுட்டான், சன்னாசிபரந்தன், அடம்பன் பகுதிகளிற்கு அரசியற் பிரிவு வேலைகளுக்காக நியமிக்கப்பட்டான்.

மக்களின் பிரச்சனைகளில் தெளிவான சிந்தனையுடைய இவன் வறுமைப்பட்ட மக்களின் சிக்கலான வாழ்வு முறையை விளக்கிக்கொண்டு அவர்களுடன் ஒன்றாகக் கலந்துகொண்டான். சிக்கலான போராட்ட காலங்களின், போது நிர்வாக சீர்கேடு காரணமாக; மக்களின் வாழ்வு, சமூகச் சிதைவுகளில் சிக்குண்டு, சீரழியாமல் காக்கவேண்டிய பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, அம்மக்களை கட்டுப்பாடான,



காப்டன் தினேஷ்

ஒழுங்கான வாழ்வு முறைக்கு வழிகாட்டி, அவர்களது அடிமை வாழ்வு முறையை உணர்த்தி அவர்களை விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக்கொண்டான். வன்னியில், மக்களிடையே தெளிவான நிலையை ஏற்படுத்தி, புலிகளின் மக்கள் பலத்திற்கு முறையான அடித்தளத்தை அமைத்ததில், தினேஷின் பங்களிப்பும் நிறைந்துள்ளது. தினேஷினது திறமையின் பிரதிபலிப்பாக...

ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு அரசியற் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். இராணுவ நெருக்குதல் மிகவும் அதிகமான இப்பிரதேசம், போராளிகளின் வாழ்வு முறைக்கு சிறிதும் ஒத்துவரவில்லை. இராணுவத்தினரதும், துரோகிகளினதும் அதிகரித்த நடமாட்டங்கள் காரணமாக, பொதுமக்கள்கூட போராளிகளுக்கு ஒத்துழைக்கவில்லை. இப்படிப்பட்ட நிலையில் அங்கு கடமை புரியச் சென்ற தினேஷ், மக்கள் ஆதரவுதான் எம்மை அங்கு நிலைபெறச் செய்யும் என்பதை உணர்ந்துகொண்டான். அதனால் தான் தொடர்ந்த ஆபத்துக்களிற்கிடையிலும் அவனால் அங்கு தொடர்ந்து நிற்கக்கூடியதாக இருந்தது. ஒட்டுசுட்டான் பகுதியில் ஆரம்பத்தில் எமக்கு சிக்கலாகவே இருந்தது. காலப்போக்கில் தினேஷினது கடுமையான உழைப்பின் விளைவாக பெரும்பாலான மக்களின் நிறைந்த ஆதரவும், பங்களிப்பும் எமக்கு கிடைத்தன. இதற்கு இப்பகுதியில் புலிகளின் மக்கள் பலத்தை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அங்கு எமக்கு ஆதரவாக நடைபெற்ற ஊர்வலங்களிலும் பொதுக்கூட்டங்களிலும்கலந்து கொண்ட மக்களின் பெருந் தொகையிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

தினேஷ், வறுமைப்பட்ட எமது மக்களின் நல்வாழ்விலும், சமூக ஆதிக்கம் நிறைந்தவர்களின் அடக்குமுறை வடிவங்களிலிருந்து அவர்களைக் காப்பதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தான். இழப்பதற்கு எதுவுமற்ற வறிய மக்களே எத்தகைய நிலையிலும் போராட்டத்திற்கு ஆதரவாகச் செயற்படுவார்கள் என்ற கருத்தை உடையவன் அவன். ஏற்றத்தாழ்வுகள் உள்ள கொடிய சமூக அமைப் புமுறையை மாற்றி சமத்துவ சமுதாயம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதில் நாட்டமுள்ளவன் தினேஷ். மக்களையும், இயற்கையையும் சமூக விரோதிகளிடமிருந்து காப்பதற்காக இரவு பகலாக விழிப்புடன் செயற்படவும் வேண்டி இருந்தது. கசிப்பு வடிப்பவர்களிடமிருந்தும், கொள்ளையர்களிடமிருந்தும் மக்களைக் காப்பாற்றிய அதே வேளை, கள்ள மரம் அறுப்பவர்களிடமிருந்து இயற்கையையும் காப்பாற்றவேண்டி இருந்தது. எம்மக்களின் போராட்ட உணர்வைத் திசை திருப்புவதற்கெனவும், இளைஞர்களைத் தவறான திசையில் கொண்டு செல்வதற்குமென, விரோதிகளால் பரப்பப்பட்ட தவறான திரைப்படங்கள், புத்தகங்களைத் தடை செய்து சமூகத்தைக் காப்பாற்றவும் வேண்டி இருந்தது. விடுதலைப் போராட்டம், எங்கள் மக்களின் வாழ்க்கை முறையை மாற்றி அமைத்ததுதான். ஆனால் நாம் வீரம் மிக்க, கலாச்சார சீரழிவு அற்ற பண்பான சமூகம் ஒன்றை உருவாக்க கடுமையாக உழைத்தோம்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் காப்டன் தினேஷினால், எம் மக்களின் கட்டுப்பட்டான வாழ்க்கை முறைக்கும், சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கும், விடுதலைப் போராட்டத்தில் பங்களிப்பதற்குமாக பல மக்கள் அமைப்புகள் உருவாக்கப்பட்டது. இணக்க சபைகள் என்ற கிராம நீதிமன்றங்களையும், அத்தியாவசிய சேவைகள் குழு என்ற சமூகப் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கான குழுக்களையும், மகளிர், அன்னையர் முன்னணிகளையும், விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்புகளையும் கிராமங்கள்தோறும் ஏற்படுத்தினான். இவை அனைத்தும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதன்மையான பங்களிப்பைச் செய்தன. அதே வேளை பொதுமக்களின் சமூக வாழ்வையும் சீரிய முறையில் கொண்டு சென்றன.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில், அப்பகுதி மக்களிடையே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை நிலைப்படுத்தி, அவர்களின் நெஞ்சங்களில் இவன் இடம் பிடித்ததால் தான் இந்தியரின் ஐந்து படை முகாம்களுக்கு நடுவிலும் இவனால் வாழ முடிந்தது. திறமையுடன் செயற்பட முடிந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பூரணமான தெளிவும், அரசியல் வேலையில் திறனும் இருந்தும் தினேஷ் இராணுவ நடவடிக்கைகளில் பங்கேற்கவும், தாக்குதல் குழுவில் இருக்கவுமே விரும்பினான். என்றாலும் இயக்கமிட்ட பணியை திறமையுடனும், உறுதியுடனும் செய்து வந்தான்.

இந்திய ஆக்கிரமிப்பாளர்களை மிகவும் வெறுத்தான். அவர்கள் உதவி செய்வதற்கு வரவில்லை என்பது அவனுக்கு ஏற்கனவே தெரியும் என்றாலும் இந்தியப் படையினரின் கொடுமையான நடவடிக்கைகளும், கேவலமான செயல்களும் அவர்கள் மீதான வெறுப்பை மேலும் அதிகரித்தது. எழுச்சியடைந்த மக்களை அடக்கி, அழித்து விடலாம் என நினைக்கும் இந்திய அரசிற்கு இங்கு தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும் என்ற உறுதி உடையவன், மக்களால் சமூகத்தின் விரோதிகள் என ஏற்றுக்கொள்ளப்பட்ட, E.P.R.L.F ஐப்பற்றியோ ஏனையவர்களைப் பற்றியோ அவன் எண்ணவில்லை. ஏனெனில் இந்தியப்படையினருக்கு முதலே அவர்கள் இந்தியாவிற்கு சென்று விடுவார்கள் என்பது அவனுக்கு நன்கு தெரியும்.

தினேஷ் எப்பொழுதுமே பிரச்சனைகளும், சிக்கல்களும் நிரம்பிய பகுதியிலே வேலை செய்வதற்கு விரும்பினான். ஒருவராலும் முடியாததை தான் செய்ய வேண்டும் என்றும் விரும்பினான். தனது போராட்ட வாழ்வின் ஒரு பகுதியை ஒட்டுச்சுட்டான் பிரதேசத்திலேயே கழித்து அங்கு போராட்டத்திற்கு சாதகமான பல மக்களமைப்புகளை ஏற்படுத்தியதோடு, அங்கு நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளிலும் பங்கு பற்றினான். அதேநேரம் இயக்கத்திற்கென பல புதிய போராளிகளையும் இணைத்துக் கொண்டான்.

அதன் பின்பு சில காலம் புதுக்குடியிருப்பு பிரதேச அரசியற் பொறுப்பாளராக கடமையாற்றிய தினேஷ் பின்பு, முல்லைத்தீவு மாவட்ட அரசியற்பிரிவு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். அவனுக்கு, இந்தியப்படையினரின் கடுமையான நடவடிக்கைகளிற்குள்ளும், மக்களிடையே இயக்கத்தைப் பலப்படுத்தி, வளர்த்தெடுப்பதில் சிரமமிருக்கவில்லை. ஏனெனில் மக்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உண்மையை உணர்ந்திருந்தனர். தம்மீதான எல்லா அடக்குமுறைகளையும் உணர்ந்திருந்தனர். அடிமைகளாக வாழ்வதில்லை என்று அவர்கள் முடிவெடுத்திருந்தனர்.

தினேஷ், தனது நற்குணங்கள் மூலம் அனைவரையும் கவர்ந்திருந்தான். அவனது அமைதியான சுபாவம், விவேகமான நடவடிக்கைகள், நன்றாகவே பழகும் தன்மை ஆகியவற்றால் அவனிடத்தில் அவன் பழகிய மக்களும், சக போராளிகளும் நிறைந்த அன்பையும், மதிப்பையும் வைத்திருந்தனர்.

**12-8-1979** அன்று,

பழம்பாசியை அண்டிய காட்டுப் பகுதிக்குள் எம்மவர்கள் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் வழமையான அவதானத்துடன், எத்தகைய நிலைமையையும் சமாளிக்கக்கூடியவாறு சென்று கொண்டிருந்தனர். தினேஷ் தனது இடுப்பிலிருந்த பிஸ்டலை சரிசெய்து கொண்டான். திடீரென எடுக்கக் கூடியவாறு இருக்கிறதென்பதை உறுதிப்படுத்திக் கொண்டான்' அக்காட்டிற்குள் குறிப்பிட்ட இடத்தில் அவர்கள் எம்மவர்கள் சிலரைச் சந்திக்கவேண்டும். அந்த அடர்ந்த சோலையான காடு நிசப்தத்தில் மூழ்கி இருந்தது. ஆனால் இவர்களின் வரவை எதிர்பார்த்து இந்தியரின் புகழ்பெற்ற அணித் துருப்பினர்கள் காத்திருப்பதை இவர்கள் அறிந்திருக்கவில்லை.

எம்மவர்களில் முன்னே சென்றவன் கூறினான். இராணுவத்தினரின் சப்பாத்துக் காலடிகள் உள்ளன என்று. காலடிகளை பார்த்துவிட்டு இந்தத் திசையில்தான் போயிருக்கிறாங்கள் என தினேஷ் கையைக் காட்டினான். அவர்களுடன் இருந்த அவர்களது பொறுப்பாளர், இராணுவத்தினர் முன்னால்தான் படுத்திருப்பார்கள் முறையான ஒரு அடி கொடுப்போம் என்றார். போராளிகளில் ஒருவன் ''ஆமி'' என்று உசார்ப்படுத்தினான். படையினரைக் கண்டவுடன் இரண்டுபக்கங்களிலும்நெருங்கி எம்மவர்கள் தாக்குதல் நடத்தினர். வீராவேசமாக தாக்கிக் கொண்டே எம்மவர்கள் முன்னேறினார்கள். அவ்விடத்தில் இருந்த இந்தியப் படையினரில் ஒருவன் ஓடிக்கொண்டிருந்தான். ஏனைய ஆறுபேர் கொல்லப்பட்டிருந்தனர். அதே நேரம் ஆங்காங்கே மறைந்திருந்த இராணுவத்தினர் சுட்டுக் கொண்டே பரவலாக முன்னேறினர். அவர்களை நோக்கி எம்மவர்களின் துப்பாக்கிகள் இயங்கிக்கொண்டிருந்தன. கொல்லப்பட்ட இராணுவ வீரன் ஒருவனது S. L. R. துப்பாக்கியைக் கைப்பற்றி அதனாலேயே எதிரிகளை தாக்கத் தொடங்கினான் தினேஷ். நீண்டநேர யுத்தம் அவனது துப்பாக்கியின் தோட்டாக்களை காலியாக்கின. தனது தோழர்களை நோக்கி பின் வாங்கத் திரும்பினான். அதே நேரம் அவனது நெஞ்சினை இந்தியப் படையினரின் துப்பாகிகளின் ரவை ஒன்று துளைத்துச் சென்றது. அத் தாக்குதல் தொடர்ந்தது. பராதுருப்பினரில் 7 பேர் கொல்லப்பட்டனர்.

எம்மவர்கள் திரும்பிக்கொண்டிருந்தார்கள், அவசரமாக அமைக்கப்பட்ட ''ஸ்ரெச்சரில்'' தினேஷ் தூக்கிவரப்பட்டான். இராணுவத்தினரின் சப்பாத்துத் தடங்கள் பரவலாக தென்பட்டன. பெரிய அளவில் பரவலாக இறங்கி உள்ளனர். எதிரியை எங்கும் திடீரென சந்திக்கலாம். நான் போகப் போகிறேன்! இறக்குங்கள், இறக்குங்கள் என்றான் தினேஷ். கீழே இறங்கியவுடன் அவனது கண்கள் தனது தோழர்களை ஆவலோடு பார்த்தன, ஆனால் அவை சோர்ந்து போகத் தொடங்கின. அவன் கையை உயர்த்தி ஆதரவை தேடினான். தோழன் ஒருவனின் கைகளை இறுகப்பற்றினான்.

''காப்டன்'' தினேஷ் வீரமரண மடைந்துவிட்டான்.''

மறுநாள்......

காப்டன். தினேஷினது உடல் இராணுவச் சீருடையில், அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவனது உடலைசுற்றி பூரண சீருடையில் எம்மவர்கள் அணிவகுத்திருந்தனர். தோழன் ஒருவன் பேசினான். ''சுதந்திர சமதரும தமிழீழம் எனும் புனிதமான இலட்சியத்திற்காக, காப்டன். தினேஷ் வீரமரணத்தை தழுவிக் கொண்டார். அவரது பாதையை நாம் உறுதியுடன் தொடர்வோம். அவருடைய இலட்சியத்தை நாம் நிறைவேற்றுவோம்.'' தோழர்கள் உறுதி எடுத்துக் கொண்டார்கள். உயர்ந்த அவர்களின் கைகளில், அன்று கைப்பற்றிய ஆயுதங்கள், வானத்தைப் பார்த்தன. இனி அவை எங்கள் மண்ணை மீட்பதற்காக போரிடும். ★

**ஒரு விடுதலைப் போராட்டத்திற்கு எவ்வித கால வரம்பையும் நிர்ணயிக்க முடியாது. இறுதி இலட்சியத்தை அடையும் வரை போராட்டம் தொடர்ந்து நடைபெறும் இது ஒரு மக்கள் யுத்தம்.**

— வே. பிரபாகரன்.

www.tamilarangam.net

# நெஞ்சு பொறுக்குமோ

நீதி கேட்டு நிமிர்ந்த புலியவள்
நேரில் பகைவர் கவச வண்டியை
மோதி உடைத்த தமிழர் மூச்சவள்
மூலையில் பெண் முடங்கவிட்டவர்
காதில் ஓங்கி அறைந்த கையவள்
கழுத்தில் நஞ்சு கட்டி நடந்தவள்
சோதி மறைந்தாள்
என்று வந்த சொல்
சுடு சொல் அல்லவோ
சுடு சொல் அல்லவோ

பெண்புலிப்படைப் பிரிவின் தலைவி
பிரபாகரனின் பிள்ளை போன்றவள்
விண்படும் என நிமிர்ந்த மேனியும்
விழியின் கூர்மையும் அன்பும் நேர்மையும்
பண்பு மிகச்சொல்லும் பழக்கமும்
பாவையாகி வந்த இவள் திறன்
எண்படும் என மகிழ இருந்தவர்
ஏங்கவோ? கெடும் சேதி எழுந்தது.

பீடு மிகு தமிழீழ நிலத்தினை
பிணித்த தளையை துணித்த தமிழ் மகள்
காடு மறைந்து பகைவனை வீழ்த்திய
கரந்தடிப் படைப் புலிகளில் ஒருத்தி
பாடு பட்டு பெண்கள் புலிப்படை
படைத்தவள் பகை உடைத்தவள் இவள்
நீடு துயில் வீழ்ந்தாளாம்
அட,
**நெஞ்சு பொறுக்குமோ நினைவு மறக்குமோ**



www.tamilarangam.net

# சோதியா எனும் சோதி அணைந்தது

நிமிர்ந்து நின்ற நெடிய மேனியள்
நெருப்பு ஏந்திய சிவந்த விழியினள்
கவிந்த அடிமை மேகத் திரள்களை
கலைக்க வந்த புரட்சிப் புயல் இவள்
பதிந்த வசந்தியின் காலடிச் சுவடுகள்
பசுமையாகவே எங்களின் நெஞ்சினில்.
நோயினால் சாவு உனக்குமோ?
வாழ்வை முடிப்பதில் இத்தனை வேகமோ?

பெண் விடுதலை பாடிய பூங்குயில்
போர்க்களத்திலே ஆடிய பெண்புலி
வண்ண வண்ண கனவுகள் யாவையும்
வாசலோடு விட்ட நெருப்பு இவள்
எண்ணில் ஆயிரம் கற்பனைக் கோட்டைகள்
இவளைச் சுற்றியே நாங்கள் எழுப்பினோம்
பாதியில் முடிந்த காவியம் போலவே
களத்தில் நின்றவள் கண்களும் மூடுமோ?

சோதியா எனும் சோதி அணைந்ததா?
சொற்ப ஆயுளில் வாழ்வு முடிந்ததா?
ஊதி ஊதியே எங்களை மூட்டி
உணர்வு ஏற்றிய காற்றும் கலைந்ததா?
தாதியாய் தந்தையாய் தலைவியாய்
தலைநிமிர்ந்து நின்றவள் தீயில் என்ற
சேதி வந்தெமை திடுக்கிடச் செய்தது.
இங்கெல்லாம் ஒரு சோகம் கவிந்தது.

மகளிர் படைப் பிரிவு,
**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

www.tamilarangam.net



# கேள்வி - பதில்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இன்றைய நிலைபற்றியும், தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் பற்றியும் எழுப்பப்படுகின்ற ஐயப்பாடுகளைத் தெளிவுபடுத்தும் நோக்கோடு கேள்வி பதில் பகுதி புதிதாக அறிமுகப்படுத்தப் படுகிறது. **"தமிழீழம்"** பத்திரிகையை விற்பனைக்குக் கொண்டுவருபவர்களிடம் கொடுக்கப்படும் கேள்விகளுக்கு இப்பகுதியில் பதில் அளிக்கப்படும்.

**கேள்வி :**

ஜனநாயகத் தேர்தலொன்றின் மூலம் வெற்றிபெற்று முதலமைச்சராகியிருக்கும் வரதராஜப்பெருமாளின் அரசைக் கலைக்க வேண்டும் என்ற கோரிக்கை சரியானதா?

**பதில் :**

வடகிழக்கு மாகாணசபைக்கு நடந்த தேர்தல் ஜனநாயகத் தேர்தலே அல்ல. அது துப்பாக்கிமுனையில் நடத்தப்பட்ட மோசடித் தேர்தல். அந்தத் தேர்தலில் ஈ. பி. ஆர். எல். எப். இனருடன் கூட்டணி அமைத்த டெலோ குழுவினர்கூட அத்தேர்தலை முறையான தேர்தலாக ஏற்றுக் கொள்ளவில்லையே.

டெலோவின் தலைவர் செல்வம் 14-5-89 அன்று வீரகேசரி பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், வடகிழக்கு மாகாண அரசு கலைக்கப்பட்டு மீண்டும் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று விரும்புகிறீர்களா?'' என்று கேட்டதற்கு,

வடகிழக்கு மாகாணசபை அமைப்பில் தமிழ் மக்கள் முழுமையான பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை. கிழக்கில் மட்டும் தேர்தல் நடந்தது. அங்கு (வடக்கில்) போட்டியின்றித் தேர்தல்கள் தான் இடம்பெற்றன. வடமாகாணம், வன்னிவாழ் மக்களுக்கு மாகாண அமைப்பில் உரிய பிரதிநிதித்துவம் இல்லை. எனவே இது கலைக்கப்படுவது என்பது சர்ச்சைக்குரிய விடயம் அல்ல'' என்று கூறியிருக்கிறார்.

தவிர, முதலமைச்சர் என்று கூறப்படும் வரதராஜப்பெருமாள் அந்த மோசடித் தேர்தலில்கூட நேரடியாக பெயர் அறிவித்து, வேட்பாளராக நின்று, மக்கள் வாக்குகளைப் பெற்று மாகாணசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்படவில்லை. தேர்தல் முடிந்தபின் அவரது குழுவுக்கு கிடைத்த போனஸ் சீட்டின் மூலம் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர்.

மோசடித் தேர்தலினால் பதவியில் அமர்ந்தபின்னர்கூட இவர்கள் ஈழத் தமிழ் மக்களுக்கு எதுவித நன்மையும் செய்யவில்லை. இவர்கள் பதவியேற்றபின் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கருத்துக்களைக் கொண்டிருந்த ஆயித்துக்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்களை கொன்று குவித்திருக்கிறார்கள்.

தமிழ் பேசும் மக்களில் ஒரு பெரும் பிரிவினரான முஸ்லீம் மக்களை தேர்தலில் புறக்கணித்ததுடன் அவர்களை வேட்டையாடி அவர்கள் உடைமைகளைச் சூறையாடி தீவைத்து பெரும் அனர்த்தங்களை இவர்களும், இவர்களது கூட்டாளிக் குழுக்களும் தொடர்ந்து செய்து வந்திருக்கின்றனர். தமிழர்களுக்கு விடிவு கிடைக்க வேண்டுமானால் முறையற்ற மோசடித் தேர்தல்மூலம் பதவியைப் பிடித்து தமிழ் மக்களைத் துன்புறுத்தி வரும் இந்த அமைப்பு கலைக்கப்பட்டேயாக வேண்டும்.

**கேள்வி :**

வடகிழக்கு மாகாண சபைக்குத் தேர்தலை நடத்துவதானால் விடுதலைப் புலிகள் ஆயுதங்கள் முழுவதையும் முதலில் ஒப்படைக்க வேண்டும் என வரதராஜப் பெருமாள் கூறியிருக்கிறாரே?

www.tamilarangam.net



**பதில் :**

கடந்த மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் வரதராஜப் பெருமாளின் ஈ. பி. ஆர். எல். எப். குழுவினர் தங்களிடமிருந்த ஆயுதங்களை எல்லாம் ஒப்படைத்து விட்டுத்தான் தேர்தலில் நின்றார்களா? ராஜீவின் பல ஆயிரக்கணக்கான அமைதிப் படை ஆதரவுடன் வரதராஜப்பெருமாளின் நூற்றுக்கணக்கான சீடகோடிகள் ஆயுதங் களைக் கையில் ஏந்தி துப்பாக்கி முனையில் வாக்களிப்பு நடத்தினார்கள்; பெருமளவு வாக்குகளைப் போட்டு வாக்குப் பெட்டி களை நிரப்பியவர்களும் அவர்களே.

மாகாணசபைத் தேர்தலுக்குப் பின் நடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போதும்கூட ஈ.பி.ஆர்.எல்.எப். குழுவினர் துப்பாக்கி முனையில் வாக்காளர்களை மிரட்டி, தேர்தல் பணியாளர்களை வாக்குச் சாவடிகளிலிருந்து அடித்து விரட்டிவிட்டுத் தங்கள் வேட்பாளர்களுக்குத் தாங்களே வாக்குகளைப் போட்டு வாக்குப் பெட்டி களை நிரப்பினார்கள்.

இந்தத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எப். இனருடன் கூட்டணி சேர்ந்து போட்டி யிட்ட T. U. L. F. இன் தலைவர் அமிர்த லிங்கம் சண்டே (5-11 - மார்ச் - 89) பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், ''ஈ. பி. ஆர். எல். எப். இனர் மக்களை அச்சுறுத்தி னார்கள். மட்டக்களப்பில் ஒரு வாக்களிப்பு நிலையத்தில் தேர்தல் அதிகாரிகளைத் தாக்கி வெளியே எறிந்துவிட்டு தங்கள் வேட்பாளர்களுக்குச் சார்பாக 650 வாக்கு களைப் போட்டார்கள். இந்திய அமைதிப் படை ஏனைய வேட்பாளர்களுக்குப் பாதுகாப்பு வழங்கத் தவறிவிட்டது'' என்று கூறியிருக்கிறார்.

தங்கள் அணியில் போட்டியிட்ட தோழமைக் கட்சியினருக்கே வாக்குகள் கிடைக்க விடாமல் துப்பாக்கி முனையில் தேர்தல் அதிகாரிகளை விரட்டிவிட்டுத் தங்களுக்குத் தாங்களே வாக்களித்தவர்கள் தான் இன்று, தேர்தலின்போது விடுதலைப் புலிகள் ஆயுதங்களை வைத்திருந்தால் அமைதியான தேர்தல் நடைபெறாது என்கிறார்கள். ஆமாம். சாத்தான்கள் வேதம் ஓதுகின்றன.

**கேள்வி :**

மறுதேர்தல் நடத்தத் தயாராக இருப்ப தாகக் கூறிவந்த வடகிழக்கு மாகாண முதல்வர் வரதராஜப்பெருமாள் இப்போது திடீரென்று விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்து அமைதிவழிக்கு வந்தால் மாகாணசபையில் 10 இடங்கள் தருவதாகக் கூறுகிறாரே?

**பதில் :**

விடுதலைப் புலிகள் அமைதிவழிக்குத் திரும்பமாட்டார்கள் என்று தப்புக்கணக் குப் போட்ட வரதராஜப்பெருமாள் தான் பதவி விலகி மறு தேர்தல் நடத்தத் தயார் என்று ஒரு பேச்சுக்குச் சொல்லி வைத்தார்.

ஆனால், எதிர்பார்க்காத வகையில் விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு அரசியற் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படும் சூழ்நிலை உருவான வுடன், தேர்தல் நடத்தப்பட்டால் விடுதலைப் புலிகள் மாகாணசபையில் முழு இடங்களையும் பிடித்துவிடுவார்களே என்று அதிர்ச்சி அடைந்த வரதராஜப் பெருமாளும், அவர்தம் குழுவினரும் ''விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்து அமைதிவழிக்கு வந்தால் 72 இடங்களைக் கொண்ட வடகிழக்கு மாகாணசபையில் 10 இடங்களை கொடுக் கிறோம். மறுதேர்தல் தேவையில்லை'' என்று அலறத் தொடங்கியிருக்கிறார்கள். இதையிட்டு நாம் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை.

**கேள்வி :**

தமிழீழ மக்களுக்கென ஒன்றுபட்ட ஒரே அமைப்பு உருவாவதற்கு விடுதலைப் புலிகள் தான் தடையாக இருப்பதாகச் சில குழுவினர் கூறிக்கொள்கிறார்களே?

**பதில் :**

மக்கள் நலனுக்கான ஒற்றுமை என்பது அந்த மக்கள் நலனுக்கான போராட்ட உணர்வில், போராட்ட முறையில், போராட்டக் களத்தில்தான் ஏற்பட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கிய நாளிலிருந்து விடுதலைப் புலிகள் பெரும் இழப்புகளுக்கு மத்தியில் நடத்திவந்த போராட்டத்தை, போராட்ட முறைகளை - போராட்டத்தில் கலந்து கொள்ளாது வெளியிலிருந்து - விமர்சித்துக் கொண்டிருந்த பல குழுவினர் திடீரென இந்திய அரசின் உதவியுடன் தங்களை இயக்கங்களாக உருவாக்கிக் கொண்டனர்.

www.tamilarangam.net



அதனால் அவர்கள் தமிழர் நலன்களைப் பேணுவதைவிட இந்திய அரசின் சொல் படியே, செயற்பட்டு வந்தனர்.

தமிழீழப் போராட்டக்களத்தில் அவர்கள் செயற்பட்டதைவிட புலிகளின் போராட்டத்தை விமர்சனம் செய்து, சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு போராட்டத்துக்கு எதிராகவே பெரும் பாலும் இயங்கிவந்தனர். தமிழீழ மக்களின் நலன்களுக்கு விரோதமாகச் செயற்பட்டு வந்த இந்தக் குழுக்களை தமிழீழ மக்கள் என்றுமே ஏற்றுக்கொண்டதில்லை.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைத் திசை திருப்புவதற்காக கடந்த இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலில் ஒற்றுமைக் கோஷத்தை முன்வைத்து இவர்கள் ஒரே அணியாக ஒரே சின்னத்தில் தேர்தலில் நின்றபோதிலும், ஒவ்வொரு குழுவினரும் தமது கூட்டணியின் ஏனைய குழு வேட்பாளர்களின் காலைவாரிவிட்டு தத்தமது குழு வேட்பாளர்கள் மட்டுமே வெற்றி பெறவேண்டும் என்ற வெறியுடன் செயற்பட்டனர்.

ஆனால், விடுதலைப் புலிகளின் வேண்டுகோளை ஏற்ற பெரும்பான்மையான, தமிழீழ மக்கள் தேர்தலைப் புறக்கணித்தார்கள். இந்தப் போலி வேடதாரக் குழுக்களின் கூட்டணி - பல இடங்களில் துப்பாக்கிகளைக் காட்டி மக்களைக் கட்டாயமாகத் தமக்கு வாக்களிக்க வைத்தும்கூட வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றி தமக்குத் தாமே வாக்களித்துங்கூட, தமிழீழத்தில் மொத்த வாக்குகளில் 12.7 சதவீத வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது. தாம் செய்த தவறுகளை மறைத்து தோல்வியிலிருந்து தப்பிவிடுவதற்காக மட்டுமே இவர்கள் ஏற்படுத்திக் கொண்ட சந்தர்ப்பவாதக் கூட்டணியை தமிழீழ மக்கள் முற்றாக நிராகரித்து விட்டார்கள்.

கொள்கைக்காக இன நலனுக்காக கூட்டணி அமைவதை தமிழீழ மக்கள் விரும்புகிறார்களே தவிர கபட வேடதாரிகளின் கூடாரத்திலிருந்து கிளம்பும் ஒற்றுமை என்னும் வரட்டுக் கோஷத்தை தமிழீழ மக்கள் என்றும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

**கேள்வி :**

வரதராஜப் பெருமாளின் வடகிழக்கு மாகாண அரசைக் கலைத்தால் தமிழீழ மக்களின் பாதுகாப்புக்கு யார் பொறுப்பு என்று சிலர் கேட்கிறார்களே?

**பதில் :**

இதுவரை தமிழீழ மக்களுக்கு அந்த ''அரசு'' பாதுகாப்பு கொடுத்திருந்தாலல்லவா அந்தக் கேள்வி எழவேண்டும்? சிங்களப் படைகளைவிட அதிக அளவு தமிழ் மக்களைக் கொன்றுகுவித்த ராஜீவின் அமைதிப்படைக்கு வக்காலத்து வாங்கி வந்ததுடன், இப்படைகள் நடத்திய வல்வைப் படுகொலைகளை உலகின் பல்வேறு பொது அமைப்புகளும், பத்திரிகைகளும், பிரமுகர்களும் கண்டித்த வேளையில் அப்படி ஒரு படுகொலை நடைபெறவேயில்லை என மறுத்து பேட்டி கொடுத்து அப்படுகொலையை மறைக்க முயன்ற ''முதலமைச்சர்'' வரதராஜப் பெருமாளும் அவரது சிடடகோடிகளும் தமக்கு பாதுகாப்பு வழங்குவார்கள் என்று தமிழீழ மக்கள் என்றும் எதிர்பார்க்கவில்லை.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்துக்காகவே ஆயுதமேந்தாத ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களைக் (பெண்கள் சிறுவர்கள் முதியவர்கள் உட்பட) கொன்று குவித்த, கொன்று குவிப்பதற்குத் துணைபோன அரக்கர் கூட்டம் தங்களைப் பாதுகாக்கும் என தமிழீழ மக்கள் எதிர்பார்க்கவில்லை.

இளைஞர்கள் சிறுவர்களை வீடுகளுக்குள் புகுந்து கட்டாயமாகக் கடத்திச் சென்று சீரழித்துவரும் இந்த இந்த சமூக விரோதக் கும்பலிடம் தமிழீழ மக்கள் தமது பாதுகாப்பை எதிர்பார்க்கவில்லை.

இத்துரோக அமைப்பு அகற்றப்பட்டால் தான் தமிழீழ மக்களுக்கு உண்மையான பாதுகாப்பு கிடைக்கும். அதற்கான பணிகளைத்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் செய்து வருகிறார்கள்.

www.tamilarangam.net



**கேள்வி :**

வரதராஜப்பெருமாளின் மக்கள் தொண்டர் படையைக் கலைத்துவிட்டால் தமிழ் மக்களின் பாதுகாப்பு என்னாவது என்று கேள்வி எழுப்பப்படுகிறதே?

**பதில் :**

வரதராஜப் பெருமாளின் C. V. F, T. N. A. என்பன எப்போது தமிழர்களைப் பாதுகாத்தன? சிங்கள இராணுவம் தமிழர்களைத் தாக்க முற்பட்ட வேளைகளில் தனித்து நின்று விடுதலைப்புலிகள் எதிர்த் தாக்குதல் நடத்திய போது அச்செயல்களை தனிநபர் பயங்கரவாதம் என்றும் வெறிச் செயல் என்றும் கண்டன அறிக்கைகள் விட்டு திண்ணை வேதாந்தம் பேசிக் கொண்டிருந்தது அவரது E. P. R. L. F.

அதன்பின் ராஜீவ் அரசு தமிழீழத்தில் விடுதலைப்புலிகளை அழித்தொழிக்க முற்பட்டபோது அவர்களோடு சேர்ந்து ஐந்தாம் படையாகச் செயற்பட்டது இந்த வரதராஜப் பெருமாள் கும்பல்.

மக்கள் ஆதரவோடு அந்நியப்படைகளினதும் இந்த ஐந்தாம்படைகளினதும் தாக்குதலை வெற்றிகரமாக விடுதலைப் புலிகள் முறியடித்ததன் பின், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கிய, தங்குமிடம் உணவு வழங்கிய பொதுமக்களை எல்லாம் இக்கும்பல் தேடிப் பிடித்து சித்திரவதை செய்தும், கொன்று குவித்தும் வந்தது. இதுவரை இந்தப் படைகளால் ஆயிரத்துக்கும் அதிகமான ஆயுதமேந்தாத அப்பாவிப் பொதுமக்கள் (பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் உட்பட) கொன்று குவிக்கப்பட்டுள்ளனர்.

பொதுக் கூட்டங்களிலும் பத்திரிகைகளிலும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கருத்துக்களைக் கூறி ஆயுதமேந்தாமல் செயற்பட்டு வந்த பொதுவாழ்வுப் பிரமுகர்கள் பெரியவர் சிவானந்தசுந்தரம், ஆசிரியர்கள் கிருஷ்ணானந்தன், கருணானந்தசிவம், பிரஜைகள் குழுத் தலைவர்கள் ராஜசங்கரி, விஜயகுமார், பேராசிரியர் ரஜனி, கிருத்தவ மதகுரு வண. சந்திரா பெர்ணாண்டோ, ஆசிரியர் சங்கத் தலைவர் வணசிங்கா, மட்டக்களப்பு கணபதிபிள்ளை போன்றவர்களை எல்லாம் குருவிகளைச் சுடுவதுபோல சுட்டுக் கொன்ற இந்தப் படைதான் தமிழீழ மக்களைப் பாதுகாக்கப் போகின்றதா? இந்தப் படை கலைக்கப்பட்டால்தான் தமிழீழ மக்கள் அமைதியாக ஆறுதலாக, மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

**கேள்வி :**

இந்தியப்படை திரும்பிச் சென்றுவிட்டால் விடுதலைப் புலிகள் மாகாண அரசுக்கும் ஈ. பி. ஆர். எல். எப். க்கும் ஆதரவான ஈழத் தமிழர்களை எல்லாம் கொன்று குவித்து விடுவர். ஈழத்தில் இரத்த ஆறுதான் ஓடும் என்று சிலர் கூறிவருகிறார்களே?

**பதில் :**

இதுவரை விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட தமிழர்கள் யார் யார் எத்தனை பேர் என்று இவர்கள் தெரிவிப்பார்களா? ஈ.பி.ஆர்.எல்.எப். கும்பலால் கொல்லப்பட்டவர்கள் பட்டியல் கொடுக்கப்பட்டதுபோல ஒரு பட்டியலை வெளியிட இவர்கள் தயாரா? விடுதலைப் புலிகள் இனத்துரோகிகளையும், சமூக விரோதிகளையும், தவறு செய்தோரையும் தண்டித்தார்களே தவிர அவர்களது குடும்பத்தினர்களைக் கொன்று குவிக்கவில்லை. விடுதலைப் புலிகள் ஒருபோதும் அப்படிச் செய்யமாட்டார்கள்.

---

15ம் பக்கத் தொடர்ச்சி

அண்மையில் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலிலும் தோல்வியுற்று இந்திய மக்களால் ஆட்சியதிகாரம் பிடுங்கப்பட்ட நிலையில் பரிதாபமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

சுயநலனுக்காகவும் வீம்புக்காகவும் ஈழப் பிரச்சினையில் ராஜீவ்காந்தி இதுவரை மேற்கொண்டு வந்த முறையற்ற நடவடிக்கைகளைக் கண்டறிந்து அவற்றை விலக்கி, இதுவரை ராஜீவின் கட்டளையையேற்று முறைகேடாகச் செயலாற்றிய அதிகாரிகளை அந்தப் பிரச்சினையினின்றும் விடுவித்து புதிய அணுகுமுறையில் இந்தியாவின் புதிய அரசு செயற்படுமென நம்புகிறோம். இதனால் தமிழீழ - இந்திய நட்புணர்வும் நம்பிக்கையும் மீண்டும் மலரும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

★

www.tamilarangam.net



அது தவறு என்பதை விடுதலைப் புலிகளின் வரலாற்று நிகழ்வுகளே நிரூபித்துக் காட்டும். விடுதலைப் புலிகளால் அண்ணன் கொல்லப்பட்டதன் பின் தப்பி, தந்தை கொல்லப்பட்டதன் பின் மகன், மாமன் கொல்லப்பட்டதன் பின் மருமகன் என்று பலர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமது உறவினராயினும் அவர்கள் தவறு செய்தால் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. அவர்களை விடுதலைப் புலிகள் தண்டித்தது சரி என்று கூறி அதன் பின் ஏராளமானோர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள். இதை நடைமுறையில் உணர்ந்த விடுதலைப் புலிகள் இனத்துரோகிகள் மீதும் தவறு செய்தவர் மீதும் உள்ள ஆத்திரத்தை அவர்களின் உறவினர்கள் மீது காட்டுவார்களா?

இதுவரை விடுதலைப் புலிகளால் தண்டிக்கப்பட்டவர்கள் இந்திய-இலங்கை ஆயுதப் படையினர், இனத்துரோகிகள், சமூக விரோதிகள், ஐந்தாம்படையினர் இவர்களே தவிர அப்பாவிப் பொது மக்களல்லர்.

துரோக, சமூக விரோத கும்பல்களுக்கு எடுபிடிகளாகச் செயற்படும் சிலரேதான் விடுதலைப் புலிகளால் தமிழீழத்தில் இரத்த ஆறு ஓடப்போகிறது என்று அலறிக் கொண்டு இருக்கிறார்கள்.

**கேள்வி :**

சிங்கள இராணுவம் கொன்றதைவிட அதிகமான தமிழ் மக்களை விடுதலைப் புலிகள் கொன்று குவித்துள்ளதாக குற்றஞ்சாட்டப் படுகிறதே?

**பதில் :**

தங்கள் வெறியாட்டத்தை மூடி மறைப்பதற்கு இனத்துரோகிகளும், அவர்களை இயக்குவிப்பவர்களும் இணைந்து நடத்தும் கோயபல்ஸ் மாதிரியிலான பிரச்சாரம் இது. இதில் துளிகூட உண்மை இல்லை என்பதை அனைவரும் அறிவர்.

1983-ல் மிகப்பெரிய அளவில் இன வெறித் தாக்குதல் ஏற்பட்டதிலிருந்து 1987-ல் அமைதி உடன்படிக்கைவரையிலான 4 ஆண்டுகாலத்தில் சிங்களப்படை கொன்றதைவிட அதிகமான தமிழ்மக்களை அமைதிகாப்பதாகக் கூறிக்கொண்டுவந்த ராஜீவின் I. P. K. F. கொன்று குவித்துள்ளது. அந்த I. P. K. F. இன் ஆதரவுடனும், ஆலோசனையுடனும் E.P R.L.F. போன்ற இனத் துரோகக் குழுக்கள்மட்டும் இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமான அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்திருக்கின்றன. இவர்கள் தங்கள் வெறியாட்டத்தை மூடிமறைப்பதற்கு விடுதலைப் புலிகள் மீது பழிபோடுகிறார்கள். ஆனாலும் இவர்களது கொலைவெறிச் செயல்கள் உலக அரங்கில் அம்பலமாகி விட்டது.

சர்வதேச மன்னிப்புச்சபை (அம்னஸ்டி இன்டர் நேஷனல்) தனது அறிக்கையில் இந்த நிகழ்கால கோயபல்சுகளின் புளுகு மூட்டைகளை அம்பலப்படுத்தியிருக்கிறது. அமைப்பின் கடந்த மே மாத அறிக்கையில் ''இந்திய - இலங்கை அமைதி உடன்படிக்கையை ஆதரிக்கும் த்ரிஸ்டார் மற்றும் ஈ. பி. ஆர். எல். எப். குழுக்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் எனச் சந்தேகப் படுபவர்களை I. P. K. F.க்கு அடையாளம் காட்ட உதவுவதாகக் கூறப்படுகிறது.''

''வேறு சில தகவல்களின்படி தமிழீழ விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களை இந்தக் குழுக்கள் I. P. K. F.இன் உதவியுடன் கொன்றதாகவும் கூறப்படுகின்றது. I. P. K. F. ஆல் தேடப்பட்டு வரும் நபர்களைப் பிடிப்பதற்காக குறிப்பிட்ட நபர்களின் உறவினர்களை I.P.K.F. பிணைக் கைதிகளாகப் பிடித்துச் சென்று அங்கு அவர்கள் தாக்கப்படுகின்றனர். வீடுகளில் நடைபெறும் வழமையான விசாரணைகளின்போதுகூட தேடப்படும் நபர்களின் உறவினர்கள் தாக்கப்படுகின்றனர்.''

''அம்னஸ்டி இன்டர் நேஷனலுக்கு கிடைத்த தகவல்களின்படி எந்த இயக்கத்தையும் சாராத சிலரையும் I. P. K. F. பலவந்தமாக, தான் சந்தேகப்படுபவர்களைக் காட்டிக் கொடுக்கும்படி கட்டாயப் படுத்தியிருக்கிறது. தங்களைக் காட்டிக் கொடுப்பவர்களுக்கு தம்மைக் காட்டிக் கொடுப்பவர்களைப்பற்றி எந்த தகவலும் தெரியவில்லை. இவ்வாறு காட்டிக் கொடுப்பவர்களை பின்னர் சித்திர வதைக்கு உள்ளாகியிருக்கிறார்கள்'' என்று குறிப்பிட்டுள்ளது.

அதுமட்டுமல்ல I. P. K .F. வல்வையில் நடத்திய ஜாலியன்வாலாபாக்கைவிட கொடிய படுகொலையையும், புத்தூரில் நடத்தியபடுகொலையையும்கூட அம்னஸ்டி இன்டர்நேஷனல் அமைப்பு தனது டிசம்பர் மாத அறிக்கையில் அம்பலப்படுத்தி கண்டித்திருக்கிறது. ★

www.tamilarangam.net



# வெறுப்புக் கோலங்கள்

பெரியவன், அந்த உயர்ந்த பனையின் அரைவாசிக்கு ஏறிவிட்டான். முன்னால் தெரிந்த காட்டுப் பிரதேசம். காலை நேரத்தில் மிக அழகாகவே இருந்தது. ஆனால் அழகை ரசித்துக் கொண்டிருக்க அவனால் முடியாது. தொடர்ந்து ஏறினான். அப்பனையின் முக்கால் பங்கை தாண்டிய பின் ஒரு முறை திரும்பிப் பார்த்தான். தூரத்தில் அந்த வயல்வெளிகளைத் தாண்டி பெரிய வெளியில் பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் தெரிந்தது. அதற்குபின் இருந்த நந்திக் கடலும் நன்றாகவே தெரிந்தது. எப்பொழுதுமே போனால் இவங்களிட்ட அடிவாங்க வேண்டும். பத்து நாளைக்கு சிவ ஏலாது. வீட்டில யும் பட்டினிதான் கிடக்க வேணும் என எண்ணியபடியே மரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவனது சிந்தனைகள் கடந்த காலத்தில் இருந்தன.

அப்பாவையும், அம்மாவையும் இவங்கள்தான் பிடித்தாங்கள். ஒரு வருசமாகப்போகுது, எங்கேயோ தெரியவில்லை. இந்தியப் படையின்ர எல்லா முகாமிலயும் போய்க் கேட்டாச்சு. முல்லைத்தீவில, வவுனியாவில, திருகோணமலையில, பலாலியில. ஒரு இடமும் இல்லையாம். தாங்கள் பிடிக்கேலயாம். சீ இவங்கட நாற்றம் பிடிச்ச படை முகாமுக்கை கைகளும், கால்களும் கட்டப்பட்டு அதுகள் பாவம் என்ன சித்திரவதை அனுபவிக்குதுகளோ! யாருக்குத் தெரியும். பெண்கள் என்றாலே நாயாக அலையும் இந்த நாய்கள் என்ன பாடு படுத்துதுகளோ. அவையோட போன, என்ரை கடைசித் தம்பியையும், தங்கச்சியையும் அம்மாவோட தான் விட்டாங்களோ, தெரியாது. அதுகள் கைக்குழந்தைகள், அன்றுகூட குழந்தையளுக்கு கடுமையான சுகமில்லையெண்டுதான் மருந்தெடுக்கப் போனதுகள். வற்றாப்பளை அம்மன் கோயில் கோபுரத்தைப் பார்த்தபடியே! அம்மாளாச்சி நீதான் அதுகளை காப்பாற்ற வேண்டுமென சற்று வாய்விட்டே உரத்துக் கூறினான். அடுத்து தவறுவிட்டவன் போல சலித்தபடியே, அம்மாளாச்சி! உன்னால உன்ர கோயிலுக்குள் அகதிகளாக தஞ்சமடைந்தவர்களையே காப்பாற்ற முடியேல. நீ எப்பிடி என்ர அப்பாவையும் அம்மாவையும் காப்பாற்றப் போகிறாய். உன்ரை கோயிலுக்கு உள்ள தானே ஆறுமுகம் வாத்தியாரும், இன்னும் ஆறு அப்பாவிகளும் செல் விழுந்து செத்தவர்கள், என எண்ணியபடியே இறங்கிக் கொண்டிருந்தான். தூரத்தில் இந்தியப் படையினர் சென்று கொண்டிருந்தனர். அவர்களை நன்றாகப் பார்த்தான். அட! நடுவில செம்மறிமுத்தனும், ராசனும் போய்க்கொண்டிருக்கினம். ஊருக்கு உதவாத வேலையலைச் செய்திட்டு, E.P.க்கு ஓடினவங்கள், இப்ப வந்து தங்களுக்கு பிடிக்காதவங்களை எல்லாம், புலிகள் என இந்தியருக்கு காட்டிக் கொடுக்கிறாங்கள். இந்தியப் படை போன பிறகு இவங்கள் என்ன செய்யப் போறாங்கள். பார்ப்பம், நானே அடிச்சுக் கொல்லுறனோ இல்லையோ பாரன், என எண்ணியபடியே நடந்தான்.

உயரத்தில் இருந்து பார்க்கையில் உண்மையையும், முழுமையையும் காணலாம் என எண்ணிக்கொண்டு தொடர்ந்து ஏறினான்.

பெரியவனுக்கு இப்பொழுது தான் பதினைந்து வயதாகிறது. ஆனால் அதற்கிடையில் அவனை நம்பி நாலு தம்பி, தங்கைகள் வீட்டில் காத்திருக்கிறார்கள். அவன் இன்று கள்ளு இறக்காவிடின் அனைவரும் பட்டினிதான். அப்பொழுது தான் நாலு ஐந்து வெடிச் சத்தங்கள் கேட்டது. வந்திட்டாங்கள், துலைந்தது! இன்டைக்கு ஆர் ஆரோ தெரியேலை என நினைத்தபடியே திரும்பிப் பார்த்தான். பாடசாலைக்குள் அந்தப் பச்சைப்பேய்கள் தெரிந்தன. சீக்கியர்கள்தான் வந்திருக்கிறாங்கள். தலைப்பாகைகள் தெரிகிறது. இப்ப இறங்கிப்

1987 மார்கழி, முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்தியப் படையினர் தங்களின் காட்டுமிராண்டித்தனத்தைக் கட்டவிழ்த்து விட்டிருந்தனர். இடைவிடாத செல் தாக்குதல்கள், கொடூரக் கொலைகள், கொள்ளைசன், கற்பழிப்புகள் தொடர்ந்து கொண்டிருந்தன. அமைதி காக்

www.tamilarangam.net



கும் படை ஊரை அழித்துக் கொண்டிருந்தது. கொடுமையாக, மிகக் கொடுமையாக அழித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுதுதான் ஒரு நாள்,

இரத்தினத்தின்ர கடைசிப் பிள்ளைகள் இரண்டும் நோய்ப் படுக்கையில் கிடந்தனர். தேவராசா வைத்தியரும் கைவிரிச்சுப் போட்டார். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக வேண்டாம், அந்த ஓலைக் குடிசையின் திண்ணையிலிருந்து இரத்தினம் சிந்தித்துக்கொண்டிருந்தான். முப்பத்தியேழு வயதிலும் அவனது இரும்புத் தேகம் நடுங்கிக் கொண்டிருந்தது. அவனது மனைவி, தனது பிள்ளைகளின் தலைமாட்டிலிருந்து அழுதுகொண்டிருந்தாள். முப்பத்திநான்கு வயதிற்குள் எட்டுப் பிள்ளைகளைப் பெற்றுப் போட்ட அவளால் அந்த நிலைமையைத் தாங்க முடியவில்லை. அவள் தனது கணவனிடம் கூறினாள்.

''வாப்பா! போவம், அவங்கள் சுட்டாப் பரவாயில்லை. என்ர கண்ணுக்கு முன்னால என்ர பிள்ளைகள் சாவதை பார்த்துக் கொண்டிருக்க என்னால ஏலாது''. இரத்தினம் நிமிர்ந்தபடியே கூறினான். ''நான் கொண்டு போய்ட்டு வாறன்.''

''ஓ, நீ செத்த பிறகு நான் உயிரோட இருப்பன் என்று நினைக்கிறாயா! நானும் வாறன் என்றபடியே வெளிக்கிட்டாள்'' அவள்.

பெரியவன் சமையற்கட்டின் திண்ணையில் அமர்ந்திருந்தான். அவனைச் சுற்றி அந்தச் சின்னஞ் சிறுசுகள் ஐந்தும் ஒட்டியிருந்தன. தலைக்கு மேலாகச் செல்லும் ஒவ்வொரு செல்லும் சற்று தள்ளி விழுந்து அதிரும்பொழுது அதுகள் அலறியபடியே அவனைக் கட்டிப் பிடித்தனர். பெரியவன் தூரத்தில் தெரியும் காட்டை வெறித்துப் பார்த்தபடியே இருந்தான். அவனது தாயார் கூறினாள். ''தம்பி பெரியவன், அந்த சிவப்பு சேலையையும், சட்டையையும் எடடா, ஆஸ்பத்திரியில நிக்கவேண்டி வந்தாலும் வரும்''.

அவர்கள் புறப்பட்டனர். இரத்தினம் தனது மகன் பெரியவனை அழைத்தான். ''தம்பி, பெரியவன், தம்பி, தங்கச்சிகளை நல்லா பார்த்துக்கொள், ராசா. நாங்கள் வந்திடுவம், ஏதும் பிரச்சனை எண்டால் அம்மம்மா வீட்ட போங்கோ'' இரத்தினம், ஒரு கணம் பிள்ளைகளை ஏக்கத்துடன் பார்த்தான்.

அவர்கள் வற்றாப்பளை சந்திக்கு வந்தனர். ஊர் அடங்கி இருந்தது. விடிந்து பத்து மணி கூட ஆகவில்லை. மூன்றாம் கட்டையை நோக்கி நடந்தனர். பெரும் வீதியைத் தாண்டி வயல் வெளியில் வந்துகொண்டிருந்தனர். தூரத்தில் முல்லைத்தீவு பிரதான வீதியில் மஞ்சள் பாலம் தெரிந்தது. இருவரும் திரும்பிப் பார்த்தனர். வற்றாப்பளை அம்மன் கோயில் நல்லாத் தெரிந்தது. அம்மாளாச்சி நீதான் காப்பாற்றவேண்டும். அவர்களது தலைக்கு மேலாக செல்கள் சென்றன. தூரத்தில் துப்பாக்கி வெடிகளும் கேட்டன.

''இவங்கள் ஏன் நிழலைக் கண்டெல்லாம் பயப்படுறாங்கள். புல் பூண்டெல்லாம் புலிகளோ இவங்களுக்கு, உலகத்தில புலிகளைத் தவிர வேற உயிர்களே இல்லையோ? ஏன் இப்பிடிச் செய்கிறாங்கள்'' என்றாள் இரத்தினத்தின் மனைவி. ''இவையள் புலிகளையும் பிடிக்கப் போறதில்லை, எலிகளையும் பிடிக்கப் போறதில்லை. எங்களைப் போன்ற அப்பாவிகளைத்தான் பிடிப்பாங்கள். நீ வேகமா நட'' என்றான் இரத்தினம்.

இரத்தினம், எப்பொழுதுமே, எவருக்குமே பயந்து நடப்பவனில்லை. சிறுவயது முதலே பனையேறி உரத்த உடம்பு, எந்நேரமும் பாளைக் கத்தியுடன் திரிவதால் அவனை எவருமே நெருங்குவதில்லை. ஆனால் இன்று இந்த அரக்கர்களின் துப்பாக்கிகளின் முன், மூன்றாம் கட்டை சந்திதெரிந்தது. திடீரென அவர்களை நோக்கி சில வெடிச்சத்தங்கள், ''கான்ட்ஸ் அப்'' என கத்திக்கொண்டே பற்றைகளுக்கிளிருந்து ஓடிவந்த இந்தியப் படையினர் அவர்களைச் சுற்றி நின்றனர்.

''ஐயா! ஆஸ்பத்திரிக்கு......''

அவனது வயிற்றில் ஒரு உதை விழுந்தது. தொடர்ந்து பல உதைகள் அடிகள், அவனது தோளிலிருந்த ஒரு குழந்தையை ஒருவன் பறித்தான். மேலும் பல உதைகள் அவனுக்கு புரியாத மொழியில் ஏசியபடியே விழுந்தன. நிமிர்ந்து பார்த்தான். ஒரு சீக்கிய சிப்பாய் அவனது குழந்தையின் கழுத்தை முறித்துவிட்டு கீழே எறிந்தான். வீரிட்டுக் கொண்டிருந்த குழந்தை அடங்கியது.

''ஐயா! என்ர குழந்தை'' மேலும் பல அடிகள், துப்பாக்கிகளின் அடிப்பாகங்கள் அவனது தலையில் முகத்தில்...தள்ளாடியபடியே விழுந்தவன் மீண்டும் நிமிர்ந்து பார்த்தான். அவனது மனைவி சேலை அகற்றப்பட்டு, சட்டை கிழிக்கப்பட்டு, பத்து பதினைந்து இராணுவத்தினர் அவளைச் சுற்றி, ஒரு சிப்பாயின் முரட்டுக் கரங்கள் அவளது பாவாடையை......

இரத்தினம் கிளர்ந்தெழுந்தான். முன்னால் நின்ற இரு சிப்பாய்களும் சற்றுத் தள்ளி

www.tamilarangam.net



விழுந்தனர் பின்னால் வந்த வனுக்கு ஒரு உதை, தனது மனைவியை நோக்கி நான்கு அடிகள்......ஒரு சிப்பாயின் S. M. G. துப்பாக்கி ரவை முடியும் வரை இயங்கியது. இரத்த வெள்ளத்தில் அவன் தலை நிமிர்ந்தான். அவனது மனைவி சாறு பிழியப்பட்டு, வெறும் சக்கையாகிக் கொண்டிருந்தாள். அவள் கையிலிருந்த கைக்குழந்தை சற்றுத் தள்ளிக் கிடந்தது. அதன் கழுத்தில் ஒரு சிப்பாய் தனது ''பூட்ஸ்'' கால்களால் மிதித்து அது இறந்த பின்பும் நசித்துக் கொண்டிருந்தான். இவர்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டும் எத்தனை காலஞ் சென்றாலும் எனது பிள்ளைகள் இவர்களை பிழிவாங்குவார்கள். மேலும் இரண்டு ரவைகள் அவன் தலையில், இந்த மனிதர்களின் குரல்கள் அந்த மிருகங்களுக்கு விளங்கவில்லை.

ஒரு வருடத்தின் பின்பு...

மூன்றாம் கட்டை இந்தியப் படை முகாமிற்கு அருகில் இருந்த அந்த பற்றைக் காட்டுக்குள் எவருமே போவதில்லை. அப்படிச் சென்றால் அவர்கள் சுட்டுக் கொல்லப்படுவார்கள். ஆனால் அன்று மாலை சில மாடுகள் அதற்குள் சென்றுவிட்டன. மாடு மேய்க்கும் சிறுவன் மாடுகளை நோக்கி ஓடினான். மாடுகளைத் துரத்திய படியே கீழே பார்த்தான், ஒரு மண்டையோடு. நிமிர்ந்தான் மரத்தின் முள்ளுக்கம்பிகளால் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது ஒரு மனித எலும்புக்கூடு. பயத்தில் திரும்ப ஓடினான் வழியில் ஒரு சிறிய மண்டையோடு. அதனைத் தாண்டி ஓடிக் கொண்டிருந்தான். ஊரை நோக்கி கிராமம் முழுவதும் கதை பரவியது.

பெரியவன் சிரித்துக் கொண்டிருந்தான் ஒரு வேளை எனது தாய் தந்தையருடையதோ! மனம் இருப்புக் கொள்ள வில்லை. தனது சித்தப்பா, மாமாவினருடன் பேசினான், அவர்கள் நால்வரும் அவ்விடத்தை நோக்கி புறப்பட்டனர், இந்தியப் படையினர் எவ்வளவு பேரைக் கொன்றுவிட்டார்கள். இது ஆற்ரை எலும்புக்கூடோ? ஆருக்குத் தெரியும், கிராமத்தவரின் வழமைபோலவே, அவர்களின் மனம் வற்றப்பளை அம்மனை நினைத்துக்கொண்டது. ''இவர்களாக இருக்கக்கூடாது'' மாமா கூறினார். ''அவங்கள் கண்டால் பிரச்சனை, சட்டைகளை



www.tamilarangam.net



கழட்டுங்கோ, மாடு மேய்க்கிறவை மாதிரி நாலு பேரும், வெவ்வேறுதிசையாலபோவம்.'' அவர்கள் அவ்விடத்தை அடைந்தனர். முதலில் அந்தச் சிறிய தலையோடு, பின்பு மரத்தில் கட்டப்பட்டிருந்த மனித எலும்புக்கூடு, ஆகியவை தெரிந்தன. மனித நேயத்தை மறந்த அந்த மிருகங்களின் கொடூரச் செயல் அவர்களின் மனங்களின் கொதிப்பை உண்டாக்கிக் கொண்டிருந்தன.

பெரியவன் எரிந்து தள்ளியிருந்த பற்றைக்குள் குனிந்து பார்த்தான். சிறிய ஒரு மனித எலும்புக்கூடு மனித உடல் உக்கியபின்பும், நிலத்தில் புதைத்தும் புதையாமல் கிடக்கும் அந்த நீண்ட தலைமயிர்கள், அது ஒரு பெண் என்பதை காட்டியது, பெரியவன் அருகில் இருந்த சிறிய மரத்தில் சாய்ந்தான். அவனது கண்களில் ஒரு பொலீதீன் பை தெரிந்தது. மரத்தின் கிளைகளுக்கிடையில் செருகப்பட்டிருந்த அதை எடுத்துப் பிரித்தான். அந்தச் சிவப்புச் சேலையும், சட்டையும், அது அவனுக்கு தெரிந்த சேலையும் சட்டையும், அவனது அம்மா புறப்படுகையில் அவன் கொடுத்துவிட்டது. கத்துவதற்கோ, அழுவதற்கோ தெரியாது அவன் வாய்களைத் திறந்தான்.

அவனது வாயைப் பொத்தியபடியே மாமா கூறினார். ''அது அம்மா தான்; தம்பி தங்கச்சியின்ர எலும்புக்கூடுகளும் இருக்கின்றன. அழுவதால் பிரயோசனம் இல்லை, பின்பு நீ எதாவது செய்துகொள்! இவங்கட அநியாயத்தை நான் மறக்க மாட்டேன். நீயும் ஒருபோதும் மறந்துவிடாதை.''

அவர்கள் அப்பகுதி விறகுகளையும், காட்டுத்தடிகளையும் குவித்தனர். நான்கு எலும்புக் கூடுகளையும் ஒன்றாக வைத்து, பெரியவனே தீயிட்டான். புகை வானத்தில் எழுந்தது. நான்கு தலைமயிர் கற்றைகளும் அவர்கள் நால்வரும், இப்பொழுது துணிந்து நிமிர்ந்து நடந்தன. அவர்களது மனங்களில், வெறுப்பு மண்டிக் கிடந்தது. வேதனை நிறைந்திருந்தது. இராணுவத்தினரால் என்ன செய்ய முடியும், சுடமுடியும், அதைத் தவிர அவர்களால் என்னதான் செய்ய முடியும், எழுந்த புகையை நோக்கி இந்தியப் படையினரின் செல்கள் வந்து விழுந்தன. இந்த அடக்குமுறை இயந்திரங்கள் துப்பாக்கிகளை இயக்கியபடியே அவ்விடத்தை நோக்கி முன்னேறின.

பெரியவனது குடிசையில் அந்தக் கிராமமே கூடி இருந்தது. நான்கு தலையோடுகளும் அந்த மக்களுக்கு வேடிக்கையாகத் தெரியவில்லை. வேதனையை விதைத்துக் கொண்டிருந்தது. இதற்குக் காரணமானவர்கள் மீது வெறுப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அவர்களது [illegible] அடிமை நிலையை உணர்த்திக் கொண்டிருந்தது. ஓரமாக நின்ற பெரியவனை சுற்றி அவனது தம்பி, தங்கைகள் நின்றனர். சின்னத்தங்கச்சி கேட்டாள் ''அப்பா, அம்மாவை ஆமிக்காரங்கள் சுட்டுப் போட்டாங்களோ?'' என்று. பெரியவன் ''ஆமாம்'' என்று தலையை ஆட்டினான். அவர்கள் ஆறு பேரும் அமைதியாக அழுது கொண்டிருந்தார்கள். ஆனால்! அவர்களின் மனங்கள் எரிமலையாக குமுறிக்கொண்டிருந்தன.

அந்த இளமனங்களில் தோன்றிய வெறுப்புக் கோலங்கள்,

இந்த ஜன்மத்தில் மாறப் போவதில்லை. அவர்களின் பகைவர்களை அவர்கள் மறக்கப் போவதும் இல்லை ★



டொறின் (சாந்தினி)
கொடிகாமம்
வீரமரணம்: 1988.03.13



விஜி (கோமதி)
கோண்டாவில்
வீரமரணம்: 1987.10.19



லெப். துர்க்கா (கமலாதேவி)
புதுக்குடியிருப்பு
வீரமரணம்: 1988.03.22



சுபாரி (ஹப்ஸா)
திருநெல்வேலி
வீரமரணம்: 1987.11.03

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மேஜர். சுரேந்திரன்

**(சிறீபாஸ்கரன் - முருகாபுரி) (20-10-62 — 26-09-88)**

அன்றைய காலைப் பொழுது மிகவும் அமைதியாக மலர்கின்றது. அமைதிக்குப்பின் ஆபத்து ஏதும் உண்டு என்பது நியதி. எமது தோழர்கள் அன்று இரவு நிகழப்போகும் அதிர்ச்சியையும் சோகத்தையும் அறியாதவர்களாய் தமது பாசறைகளில் தத்தமது வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். கடந்த சில நாட்களுக்கு முன் நடந்த மோதலில் 2-வது லெப்டினன்ட் ராமுவின் வீர மரணத்தால் பாதிக்கப்பட்டு சோகமயமாகக் காணப்பட்டனர். ஆனால் அவர்களின் செயல்களில் உறுதி மேலோங்கி நின்றது! ராமுவின் வீர மரணத்தை ஈடுசெய்வதற்காக, வீரமரணத்திற்குக் காரணமாயிருந்த IPKF இனரைப் பழி வாங்க சுரேந்திரன் திட்டமிட்டான். 26-09-88 அன்று சுரேந்திரன் தலைமையில் நான்கு பிரிவுகளாக எமது தோழர்கள் புறப்பட்டனர். அதில் ஒரு பிரிவுக்கு சுரேந்திரன் தலைமை தாங்கினான். ஆனால் அதில் வீரமரணத்தைத் தழுவுவான் என்று யாரும் நினைக்கவில்லை! ஆம், அந்த சோகமயமான நிகழ்ச்சி அன்று இரவு (26-09-88) அன்று நடந்துவிட்டது. தனது தோழர்களை அழைத்துக்கொண்டு சலப்பையாற்றை நோக்கி விரைந்தான். அங்கே எமது தோழன் சுரேந்திரன் மிகவும் வீரத்துடன் சளைக்காமல் போராடி தன் உயிரை தமிழீழ விடுதலைக்காக அர்ப்பணித்தான். தமிழீழ மண்ணை தனது செங்குருதியால் நனைத்தான். ஆனால் அவன் உடல் மட்டுமே எம்மை விட்டுச் சென்றது.

அவனுடைய நினைவுகள் எம்முடனேயே உலாவருகின்றது. அவன் விட்டுச்சென்ற பாதச்சுவடுகளை பின் தொடர்கின்றோம். அவனுடைய இழப்பை ஈடுசெய்ய முடியாது. அவனுடன் இருந்த தோழர்கள் யாவரும் கதறி அழுதனர். சுரேந்திரன் போர்த் தலைவனாக நடந்ததில்லை. நண்பனுக்கு நண்பனாக, சகோதரனாக எல்லோருடனும் பழகினான். அவன் அன்பு எல்லோர் மனதிலும் நிறைந்திருந்தது. அவன் தன் வீரமரணத்திலும் காவியம் படைத்தான். அவன் கலப்பையாறு கடைசி மோதலில் (26-09-88) பங்குபற்றி புதிய அத்தியாயம் படைத்து விட்டுச் சென்றான். அவனுடைய வீரமரணத்தின்போது முதன் முதலாக திருகோணமலையில் IPKF உடனான நேரடி மோதலில் ஆயுதங்களைக் கைப்பற்றினோம். SLR-2, SMG-1, கண்ணிவெடி கண்டுபிடிக்கும் கருவி-1 மற்றும் ரவைகள் ஆகியன அங்கு கைப்பற்றப்பட்டன.



மேஜர் சுரேந்திரன்

திருமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சிறீபாஸ்கர் என்ற இயற்பெயரைக் கொண்ட சுரேந்திரன் தன்னுடைய பள்ளிப் படிப்பு முதல் தமிழீழத்திற்காக தன்னுடைய பங்களிப்பை அர்ப்பணித்தவன். 1977 கலவரத்தின்போது தன்னுடைய வீட்டை இழந்து இருக்க இடமில்லாமல் ஒவ்வொரு இடமாகச் சுற்றித் திரிந்தவன்.

திருமலையில் தொடர்ந்து நடந்த வன்முறைச் சம்பவங்களால், தமிழின ஒடுக்குமுறையாளர்களாகிய சிறீலங்கா அரசினால் ஏற்பட்ட வெறுப்பினால் சுதந்திரத் தமிழீழம் ஒன்றேதான் எதிர்காலச் சந்ததிக்கு வழி என்று எண்ணிய சிறீபாஸ்கர், 1983-ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்துகொண்டான். பின் தன் பயிற்சியை முடித்துக்கொண்டு சுரேந்திரன் என்ற பெயருள்ள வேங்கையாக நீண்டகாலப் போராட்டத்திற்கு தன்னைத் தயார்படுத்திக் கொண்டு களத்தில் இறங்கினான். தமிழீழ விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த சுரேந்திரன் முதல் தடவையாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் பயிற்சிக்கென 'வருபவர்களைப் பாதுகாப்பாக அழைத்து வருவதில் ஈடுபட்டான். பின் வடமராட்சியில் காப்டன் ரஞ்சன் லாலா (வீரமரணம்

www.tamilarangam.net



அடைந்த மத்திய குழு உறுப்பினர்) வுடன் பணிபுரிந்தான். இவன் தனித் தோற்றத்தினால் சிங்களவன் என்று பட்டப்பெயரால் எல்லோராலும் அழைக்கப்பட்டான். சுரேந்திரன் என்றால் தெரியாதவர்கள்கூட சிங்களவன் என்றால் அவரா என்று சொல்கிற அளவிற்கு அன்புடனும், குழந்தை போன்றும் எல்லோருடனும் பழகி வந்தான். அந்த நாட்களில் ரஞ்சன் லாலாவுடன் தமிழீழத்தின் துரோகிகளுக்கு மரண தண்டனை வழங்குவதில் அவன் செயற்பாடுகள் குறிப்பிடத் தக்கது.

காப்டன் பண்டிதர் (மத்திய குழு உறுப்பினர்) 1984-ம் ஆண்டு வல்வெட்டித்துறையில் அட்டகாசம் புரிந்த சிறீலங்கா கடற்படையினரைத் தாக்கி 7 ஆயுதங்கள் கைப்பற்றிய நிகழ்விலும் சுரேந்திரன் பங்கு குறிப்பிடத்தக்கது.

மற்றும் அக்காலகட்டத்தில் நடந்த பல தாக்குதல்களிலும் இவன் பங்கு பற்றினான். சிறிது காலம் பிரதித்தலைவர் மாத்தையாவுடன் நின்று வன்னிப்பகுதியில் சில போராட்ட நடவடிக்கைகளிலும் ஈடுபட்டான்.

ஒரு முறை சிங்களவன் என இவனை எண்ணிய தமிழ் மக்கள் பிடித்துவிட்டனர். பின்னர் எம்மவர்கள் சென்று அழைத்து வந்தனர். இவனைப் பார்த்து எவருமே தமிழன் என்று சொல்லமாட்டார்கள். வடமராட்சியில் நின்ற சுரேந்திரன், வீரமரணமடைந்த லெப். கேர்ணல் சந்தோசம் மாஸ்ரருடன் தன்னுடைய சொந்த மண்ணுக்குப் புறப்பட்டான். அங்கும் அவன் தமிழீழப் பணிகளைச் சளைக்காமல் செவ்வனே புரிந்தான். ஆபத்தான வேளையிலும் அவனிடம் பதட்டம் இருக்காது. நிதானமாகச் செயற்படுவான். ஆபத்தென்றாலும், குதூகலம் என்றாலும் ஒரே நிலையில் தான் இருப்பான். எதற்கும் அஞ்சமாட்டான். திருமலையில் இவனுடைய சாதனைகளில் முதல் சாதனையாக, வீரமரண மடைந்த லெப். கேர்ணல் புலேந்திரன் தலைமையில் பராக்கிரமபுரத்தில் சிறீலங்கா இராணுவத்திற்கு எதிரான மோதலில் பங்குபற்றினான். இதில் எம்மவர்கள் ஐங்கரன், கடாபி ஆகியோர் வீரமரண மடைந்தனர். இவன் பங்கு பற்றிய தாக்குதல்களில் 85-இல் குச்சவெளி போலீஸ் நிலையத் தாக்குதல், சிறீலங்கா இராணுவத்துடனான நேரடி மோதல் என்பன குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து 1987-ம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்போது யாழ்ப்பாணத்தில் சில நாட்கள் தங்கினான். வீரமரணமடைந்த லெப். கேர்ணல் புலேந்திரனின் இறுதிச் சடங்கை இவன் முன்னின்று நடத்தினான்.

இதற்கிடையில் எமது வீரர் பன்னிரண்டுபேரின் வீரமரணத்தின் எதிரொலியாக இந்திய இராணுவத்துடன் மோதல்கள் ஆரம்பமானவுடன் தன்னுடைய தோழர்களுடன் திருமலையை நோக்கித் தன்னுடைய பயணத்தைத் தொடர்ந்தான். இதற்கிடையில் புதுக்கோட்டைச் சந்தியில் (புத்தூர்) எதிர்பாராதவிதமாக இந்திய இராணுவத்தின் மூர்க்கத்தனமான தாக்குதலில் இருந்து வெற்றிகரமாகத் திருமலை சென்ற அவன் முதன் முதலாக அங்கு நடந்த கண்ணி வெடித் தாக்குதலில் முக்கிய பங்கு வகித்தான். அதில் ாப்டன். அத்தான் (குமார்) வீரமரணமடைந்தான். இந்தத் தாக்குதலில் மிதிகண்ணிவெடிகள் (I.P.K.F.இனரால் வைக்கப்பட்டவை) சிலவற்றைக் கண்டெடுத்தான். இப்படித் தமிழின விடுதலைக்காக ஒவ்வொரு அடியையும் நிதானமாக வைத்தான். இவன் எடுக்கும் முடிவுகள் நிதானத்துடன் இருக்கும். பதட்டம் என்பது இவனிடம் துளிகூட இல்லை. அருகில் இராணுவம் என்றாலும் பயப்படாமலும், பதட்டப் படாமலும் கையில் ஆயுதம் ஏதும் இல்லையென்றாலும் முன்னேறுவான். நண்பர்களைக் கேலி செய்வதென்றால் இவனுக்குப் பிடிக்கும். இவனையும் சக போராளிகள் கேலி செய்வார்கள். கடைசி நேரத்திலும் நீண்டகாலப் போராட்டத்திற்கு உணவுப்பொருட்களைச் சேர்த்தவண்ணம் இருந்தான். அவனுடைய செயல்கள், நினைவுகள் எமது நெஞ்சை விட்டு என்றும் அழியாது! அவ்விலட்சியம் நிறைவேற நாம் அவன் விட்டுச் சென்ற பணியில் எம் தலைவனின் வழி நின்று செயற்பட்டு தமிழீழத்தை வென்றெடுப்போம். ★

---

**ஒரு விடுதலைப் போராளியானவன் தனது சுயத்தின் வரம்புகளுக்கு அப்பால் மேலோங்கி, தன்னை முழுமையாக போராட்டத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும். நான் எனது மக்களின் சுதந்திர வேட்கையைப் பிரதிபலிக்கும் ஒரு வடிவம்தான்.**

— வே. பிரபாகரன்.

www.tamilarangam.net



ஈழத் தமிழர்களைப் பழிவாங்கப் பயன்படுத்திய

# ஆட்சி அதிகாரத்தை ராஜீவிடமிருந்து இந்திய மக்கள் பிடுங்கினர்!

## தமிழீழ - இந்திய நட்புணர்வு மீண்டும் மலர்கிறது!!

**தனது சுயநல நோக்கத்துக்காக தனது கட்டளையின்படி, அடிபணிந்து போக மறுத்த விடுதலைப் புலிகளையும், தமிழீழ மக்களையும் ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்தி பழிவாங்கி வந்த ராஜீவ்காந்தியிடமிருந்து அந்த ஆட்சி அதிகாரத்தை, இந்திய மக்கள் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் வாக்குச்சீட்டின் மூலம் பிடுங்கி யிருக்கின்றனர். இந்திய மக்களுக்கும், ஈழத்தமிழ் மக்களுக்குமிடையே நீண்ட நெடுங்காலமாக நிலவிவந்த நட்புணர்வையும், நம்பிக்கையையும் பெரிதாக மதித்த தமிழீழ விடுதலைப் புலிகள் ராஜீவ்காந்தியினதும், அவரது படையினரதும் பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் எவ்விதம் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டார்கள் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.**

நீண்ட நெடுங்காலமாக தமிழீழ மக்களுக்கு இந்தியாவின் மீது இருந்துவந்த நட்புணர்வுக்கும், நம்பிக்கைக்கும் ஊறு நேர்ந்துவிடக் கூடாது என்ற ஒரே காரணத்துக்காகவே தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ விடுதலைக்காக நடத்திவந்த போராட்டத்தை இடை நிறுத்தி இந்திய அரசு இலங்கையோடு செய்து கொண்ட அமைதி உடன்படிக்கைக்கு - அது தமிழர் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு எதுவிதத்திலும் உதவப்போவதில்லை என்பதை நன்கு தெரிந்தபோதிலும் அதை எதிர்க்காமல் - ஒத்துழைப்பது என்ற முடிவுக்கு வந்தனர்.

இந்திய அரசின் முயற்சிக்கு மதிப்பளித்து விடுதலைப் புலிகள் இந்த முடிவை எடுத்த போது தமிழீழ மக்களையும், இயக்க உறுப்பினர்களையும் மிகவும் சிரமப்பட்டு அமைதிப் படுத்த வேண்டியிருந்தது.

அமைதி உடன்படிக்கையினால் ஈழத் தமிழர்களுக்கு நன்மை எதுவும் கிடைக்காத போதிலும் ராஜீவ் அரசின் முயற்சிக்கு ஒத்துழைப்புக் கொடுக்க முன்வந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் நல்லெண்ணத்தை மதிக்காத ராஜீவ் அரசு, அந்த அமைதி உடன்படிக்கையில் உறுதி அளிக்கப்பட்டிருந்த தமிழர் நலன்களிலோ, இயக்கத்தின் பாதுகாப்பிலோ எதுவித அக்கறையும் காட்டவில்லை.

இந்திய - இலங்கை அமைதி உடன்படிக்கைக்கு மதிப்பளித்து யுத்த நிறுத்தத்தை உறுதியாகக் கடைப்பிடித்து தம்மிடமிருந்த ஆயுதங்களில் பெரும்பகுதியை தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தியப்படையினர் முன்னிலையில் ஒப்படைத்தனர். விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்து, யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்த அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கை அரசு முன்னெப்பொழுதும் இல்லாத அளவு சிங்களக் குடியேற்றங்களை தமிழர் பாரம்பரிய நிலங்களில் வேகமாக ஏற்படுத்தியது. இந்திய அரசினால் ஊட்டங்கொடுத்து வளர்க்கப்பட்ட ஏனைய குழுக்கள் ஆயுதமேந்தி விடுதலைப் புலி இயக்க வீரர்களை வேட்டையாடினர். உடன்படிக்கையின்படி சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களையும், விடுதலைப் புலிகளையும் விடுவித்திருக்க வேண்டிய இலங்கை அரசு, அதற்கு மாறாக உடன்படிக்

www.tamilarangam.net



கையை மீறி இயக்க இளைஞர்களைக் கைது செய்துவந்தது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம், பாதுகாப்பு என்ற பெயரில் தமிழ் பகுதிகளில் இழந்துவிட்டிருந்த தனது நிர்வாகத்தை மீண்டும் நிலைநிறுத்தும் நடவடிக்கைகளில் ராஜீவ் அரசு இறங்கியது.

கைகள் கட்டுண்ட நிலையில் இவற்றையெல்லாம் விடுதலைப் புலிகள் இந்திய அரசுக்கு பல தடவைகள் சுட்டிக்காட்டியபோதிலும் இந்திய அரசு அதற்குச் செவிசாய்க்கவில்லை.

ராஜீவ் அரசுக்கு மதிப்பளித்து ஆயுதங்களை விடுதலைப புலிகள் ஒப்படைத்தபோது தமிழினத்தினதும், இயக்கத்தினதும் பாதுகாப்புக்கான முழுப்பொறுப்பையும் இந்திய அரசே மேற்கொள்ள வேண்டுமென்று உறுதியாகக் கூறியிருந்தனர்.

ஆனால், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு உண்மையிலேயே சிறிதளவுகூட ஈழத் தமிழரின்பால் அனுதாபமோ அன்றி ஈழப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டும் என்ற ஆர்வமோ கொஞ்சம்கூட இருக்கவில்லை. அவர் இந்திய - இலங்கை அமைதி உடன்படிக்கையின் மூலம் சமாதானப் பிரியர் என்ற முகமூடியைப் போட்டுக்கொண்டு அதற்குள் தன் போபர்ஸ் கறையை மறைத்துவிடலாம் என்ற நோக்குடனேயே ஈழப்பிரச்சினையில் இறங்கினார்.

அந்நிலையில்கூட விடுதலைப் புலிகள் ராஜீவின் அமைதி உடன்படிக்கையை எதிர்க்காது, இலங்கை அரசின் உடன்படிக்கை மீறல்களைத் தடுத்து நிறுத்தி உடன்படிக்கையை முழுமையாகவும், துரிதமாகவும் நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுக்கும்படி கோரி இந்திய தேச பிதா மகாத்மா காந்தி காட்டிய வழியில் உண்ணாவிரதப் போராட்டத்தைத்தான் மேற்கொண்டனர்.

அந்த வேளையில்கூட, அந்த உண்ணாவிரதப் போராட்டம் இந்தியாவுக்கோ, ராஜீவ் காந்தியின் அமைதி உடன்படிக்கைக்கோ எதிரானது அல்ல என்றும், அமைதி உடன்படிக்கையை துரிதமாக முறையாக நடைமுறைப் படுத்தும்படி இலங்கை அரசைத் தட்டிக் கேட்க ஒரு வாய்ப்பாக அந்தப் போராட்டத்தைப் பயன்படுத்தும்படிதான் இந்திய அரசை விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்டனர்.

ஆனால், விடுதலைப் புலிகளின் இந்த நல்லெண்ண உணர்வுகளுக்கு சிறிதளவும் மதிப்பளிக்காத ராஜீவ் அரசு, அதன் பின் விடுதலைப் புலிகளைப் பழிவாங்கும் வகையிலேயே தொடர்ந்து செயற்பட்டு வந்தது.

* இந்திய - இலங்கை அமைதி உடன்படிக்கையைக் காலந்தாழ்த்தாது முழுமையாக, துரிதமாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கும்படி விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அமைதி வழியிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ராஜீவ் அரசு ஏளனம் செய்ததுடன், தனது பிரச்சார இயந்திரங்கள் அனைத்தையும் அந்த உண்ணாவிரதப் போராட்டத்துக்கு எதிராக முடுக்கிவிட்டது. ராஜீவ் அரசின் பாராமுகத்தினால் அன்று வீரமறவன் திலீபன் சாகடிக்கப்பட்டான்.
* திலீபனின் தியாக மரணத்தின் பின்பும் கூட விடுதலைப் புலிகளின் தலைவர் பொறுமையை இழக்காது இந்திய அதிகாரிகளோடு அமர்ந்து பேசி தற்காலிக நிர்வாகத்தை இயக்கம் ஏற்று நடத்துவதற்கு ஒப்புக்கொண்டபோதிலும் கூட, அதற்கான உறுப்பினர்களை நியமிக்கும் விடயத்தின் விடுதலைப் புலிகளுக்குக் கொடுத்த வாக்குறுதிகளின்படி இந்திய அதிகாரிகள் செயற்படத் தவறியது மட்டுமல்ல. ''விடுதலைப் புலிகள்தான் முரண்டு பிடிக்கிறார்கள்'' என்று விடுதலைப் புலிகள் மீது பழியைப் போட்டனர்.
* அமைதி உடன்படிக்கைக்கு மதிப்பளித்து ஆயுதங்களை ஒப்படைத்த விடுதலைப் புலிகளை வேட்டையாட, ஏனைய குழுக்களுக்கு மறைமுகமாக ஆயுதங்கள் கொடுத்து களத்திலிறக்கிய ராஜீவ் அரசு, அதுபற்றி விடுதலைப் புலிகள் கொடுத்த புகார்களை நிராகரித்ததுடன், விடுதலைப் புலிகள்தான் ஏனைய குழுக்களை அழிக்கிறார்கள் என்ற பொய்ப் பிரச்சாரத்தையும் திட்டமிட்டு மேற்கொண்டது.
* அமைதி உடன்படிக்கையில் குறிப்பிட்டதற்கு மாறாக இந்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த கடற் பகுதியில் வைத்து 17 விடுதலைப் புலி இயக்க வீரர்களைக் கைது செய்த இலங்கை அரசு, அவர்களை விசாரணைக்காக கொழும்புக்குக் கொண்டு செல்ல முற்பட்டபோது ராஜீவ் அரசிடம் அதைச் சுட்டிக் காட்டிய விடுதலைப் புலிகள், ''அமைதி உடன்படிக்கையை மதித்துத்தான் 17 வீரர்களும் இலங்கைப் படையினரை எதிர்த்துத் தாக்காமல் சிங்களப் படையிடம்

www.tamilarangam.net



கைதானார்கள். அமைதி உடன்படிக்கையின்படி அவர்களைக் கைது செய்ய முடியாது. இலங்கைப்படை அவர்களிடம் ஏதாவது விசாரணை நடத்துவதானால் இந்திய அதிகாரிகளின் பாதுகாப்பில் தமிழீழப் பகுதியில் வைத்து நடத்தலாம். ஆனால், அவர்களை எக்காரணம் கொண்டும் கொழும்புக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கக்கூடாது. சிங்களப் படை அவர்களைக் கொழும்புக்குக் கொண்டு செல்வதற்கு இந்தியப்படை அனுமதித்தால் 17 வீரர்களும் சயனைட் அருந்தி உயிரை மாய்த்துக் கொள்வார்கள்'' என்று உறுதியாகக் கூறினர். அவ்வேளையில், ''17 வீரர்களையும் கொழும்புக்குக் கொண்டுசெல்ல தாம் அனுமதிக்கப் போவதில்லை என்றும், மேலிடத்தில் பேசி அவர்களை விடுவிக்க ஆவன செய்வதாகவும் இந்திய அதிகாரிகள் விடுதலைப் புலிகளிடம் உறுதியளித்திருந்தனர். ஆனால், அந்த 17 பேரின் உயிரையும் பணயம் வைத்து விடுதலைப் புலிகளைப் பணிய வைக்கலாம் என்ற நயவஞ்சக எண்ணத்துடன் ராஜீவ்காந்தி அந்த 17 வீரர்களையும் கொழும்புக்குக் கொண்டு செல்வதற்கு சிங்களப் படையை அனுமதிக்கும்படி இந்தியப் படைக்கு உத்தரவிட்டார். ராஜீவ்காந்தியின் இந்தப் பழிவாங்கும் நயவஞ்சகப் போக்கினால் விடுதலைப் புலிகள் 12 தளபதிகளை அநியாயமாக இழந்தார்கள்.

* ஆரம்பத்தில் தமிழீழத்துக்குச் சென்ற இந்தியப்படை தமிழீழ மக்களின் சாலை மறியல், சிங்களப் படைக்கு எதிராக விடுதலைப் புலிகள் தெருவெங்கும் புதைத்துவைத்திருந்த கண்ணிவெடிகள் இவற்றினால் நகருக்குள் நுழைய முடியாமல் திண்டாடியபோது பல ஆயிரக் கணக்கான கண்ணிவெடிகளை அகற்றி, பொதுமக்களைச் சமாதானப்படுத்தி சாலை மறியல்களையும் தளர்த்த வைத்து இந்தியப்படை நகருக்குள் செல்ல வழி அமைத்துக் கொடுத்த விடுதலைப் புலிகளை - ஆயுத ஒப்படைப்பு என்ற பெயரில் அவர்களின் ஆயுதங்களைக் கீழே போட வைத்துவிட்டு - திட்டமிட்டு அழிக்கும் முயற்சியில் இறங்கியது ராஜீவ் அரசு.

யுத்த காலங்களில்கூட எங்கேயும் நடைபெறாத வகையில் திட்டமிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த செய்திப் பத்திரிகை அலுவலகங்களையும், விடுதலைப் புலிகள் நடத்திவந்த ''நிதர்சனம் தொலைகாட்சி, மற்றும் வானொலி நிலையங்களையும் இரவோடு இரவாக திடீரென குண்டு வீசித் தகர்த்துவிட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை உள்ளே அனுமதிக்காது விடுதலைப் புலிகள் மீது கண்மூடித்தனமான தாக்குதலை ராஜீவின் இராணுவம் மேற்கொண்டது.

* கடுமையான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் கூட தம்மிடம் பிடிபட்ட இந்தியப் படையினர் சாகக் கூடாது என்று இந்தியாவின் மீது கொண்டிருந்த நல்லெண்ணத்தின் பேரிலும், மனிதாபிமானத்தின் பேரிலும் கடுமையாகக் காயமடைந்திருந்த இரண்டு இந்தியப் படையினரை உடனடியாக விடுவித்த விடுதலைப் புலிகள்மீது, ''கைது செய்த இந்தியப் படையினரை விடுதலைப் புலிகள் உயிருடன் டயர்களைப் போட்டுக் கொளுத்தினார்கள்'' என்று பழி சுமத்தி பொய்ப் பிரச்சாரத்திலிறங்கியது ராஜீவ் அரசு.

கைது செய்த வீரர்களைப் புலிகள் படுகொலை செய்தார்கள் என்ற அவச்சொல்லைப் பொய்யாக்கும் வகையில் தாம் பிடித்து வைத்திருந்த மேலும் 18 இந்தியப் படையினரை - கைதிகள் பரிமாற்றம் போன்ற தமது லாபநோக்கத்துக்கான - எதுவித முன் நிபந்தனைகளையும் போடாது (கைதிகளை விடுவிக்கும் வேளையில் தமது பாதுகாப்புக்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கான சில நிபந்தனைகளை மட்டும் விதித்து) விடுதலைப் புலிகள் விடுவிக்க முன்வந்த போது, ''செயற்படுத்த முடியாத நிபந்தனைகளைப் புலிகள் விதிக்கிறார்கள்'' என்று பொய்ப் பிரச்சாரம் செய்ததுடன், கைதிகள் விடுவிக்கப்படுவதை பார்வையிட அழைத்துச் சென்ற பத்திரிகையாளர்களையும் விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட இந்திய வீரர்களிடம் பேட்டி காணவோ, அவர்களிடம் உண்மை நிலையைக் கேட்டறியவோ ராஜீவின் அதிகாரிகள் அனுமதிக்காதுடன் ''கைது செய்யப்பட்ட இந்தியப் படையினரை விடுதலைப் புலிகள் சித்திரவதை செய்தார்கள், கொடுமைப் படுத்தினார்கள்'' என்று பொய்ப் பிரச்சாரத்தையும் மேற்கொண்டனர்.

www.tamilarangam.net



* இந்தியாவின் மீதும் இந்திய மக்களின் மீதும் தாம் கொண்டிருந்த ஆழமான மதிப்பு, நட்பு இவற்றின் காரணமாக, ராஜீவ் அரசினதும், அதிகாரிகளினதும் கீழ்த்தரமான பழிவாங்கும் நடவடிக்கை களையெல்லாம் பொருட்படுத்தாத விடுதலைப் புலிகள் யுத்தத்தில் அவ்வப் போது தம்மால் சிறைப்பிடிக்கப்பட்ட இந்தியப்படை வீரர்களைத் தொடர்ந்து விடுதலை செய்து வந்திருக்கின்றனர்.

ஆனால், ராஜீவ் அரசின் படை யினரோ தமிழீழத்தில் விடுதலைப் புலி களை மட்டுமன்றி புலிகளின் ஆதரவாளர் களான பொதுமக்களைக்கூட ஆயிரக் கணக்கில் பிடித்து இராணுவ முகாம்களில் அடைத்துவைத்து சித்திரவதை செய்த துடன் அவர்களில் பலரை முகாம்களி லேயே அடித்துக் கொன்றிருக்கின்றனர்.

அதுமட்டுமல்ல, ராஜீவ்காந்தி ஒவ் வொரு தடவை தமிழகத்துக்கு வருகை தந்த வேளைகளிலும் அவரது பாது காப்புக்கு என்று காரணம் கூறி - தமிழ கத்தில் சட்டம் ஒழுங்கை மதித்து கடைப் பிடித்து வந்த - விடுதலைப்புலி இயக்க வீரர்களையெல்லாம் சமூக விரோதிகள் என்ற பெயரில் பிடித்து சிறைகளில் அடைத்து அவமானப்படுத்திவந்தது ராஜீவ் அரசு.

* அதே வேளை, தனக்குச் சலாம் போட்டுக் கொண்டு தமிழகத்தில் சமூக விரோத நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்த ஈழத்தின் சில குழுக்களுக்கு முழுமையான பாதுகாப்பும் உதவியும் வழங்கி வந்தது ராஜீவ் அரசு. தமிழகத்தில் சூளைமேடு படுகொலை, பேராவூரணி படுகொலை சம்பவங்களில் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சமூக விரோதிகளை யெல்லாம் விடுவித்து அவர்களுக்கு வேண்டிய பணம், ஆயுதப் பயிற்சி, ஆயுதம் என்பவற்றைத் தாராளமாக அள்ளி வழங்கி, அவர்களை விடுதலை இயக்கமாக அங்கீகரித்து விடுதலைப் புலி களுக்கெதிராகத் தூண்டிவிட்டது ராஜீவ் அரசு.

* இந்திய மண்ணில் சட்டம் ஒழுங்கை மதித்து கண்ணியம், கட்டுப்பாட்டோடு இயங்கி தமிழக காவல்துறை அதிகாரி களாலேயே பாராட்டப்பட்ட விடுதலைப் புலி இயக்கத்தினரை, அவர்கள் ராஜீவ் காந்தியின் அடிமைகள் போன்று செயற்பட மறுத்த ஒரே காரணத்துக்காக ''சமூக விரோதிகள்'', ''இந்திய ஒருமைப் பாட்டுக்கு உலைவைப்பவர்கள்'', ''சட்ட விரோதமாக, திருட்டுத்தனமாக நாட் டுக்குள் நுழைந்தவர்கள்'', ''சதிகாரர் கள்'' என்றெல்லாம் குற்றம் சுமத்தி அவர் களைக் கைது செய்து விசாரணையற்ற கொடிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்துக் கொடுமைப் படுத்தியது ராஜீவ் அரசு.

* ராஜீவ்காந்தியினதும், அதிகாரிகளினதும் அடக்குமுறை, அவமானங்களையெல்லாம் சகித்துக்கொண்டு விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் ராஜீவ் அரசோடு பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுவந்த வேளையில் விடுதலைப் புலிகளின் லெப்டினன்ட் கேர்ணல் ஜானியை பேச்சுவார்த்தைக் கென விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திக்க அழைத்துச் செல்வதாகக் கூறி சென்னையிலிருந்து விமானப்படை விமானத்தின் மூலம் வவுனியாவுக்கு அழைத்துச் சென்று நடுக் காட்டில் வைத்து நயவஞ்சகமாகச் சுட்டுக் கொன்று யுத்த தர்மத்துக்கே இழுக்கை, களங்கத்தை ஏற்படுத்தியது ராஜீவின் படை.

* அமைதிப் பேச்சுவார்த்தைக்கான கதவுகள் ராஜீவ் அரசால் முற்றாக அடைக்கப் பட்ட நிலையில் நிபந்தனையற்ற முறை யில் பேச்சுவார்த்தைக்கு அழைத்த இலங்கை அரசின் அழைப்பை ஏற்று விடுதலைப் புலிகள் இலங்கை அரசோடு பேச்சுவார்த்தையில் இறங்கியிருக்கின் றனர்.

* கடந்த இரண்டு ஆண்டுகளாக இலட்சத் துக்கும் அதிகமான ஆயுதப் படையினரை ஏவிவிட்டும், தனது பிரச்சார சாதனங் களான தொலைக்காட்சி மற்றும் வானொலிகளின் மூலம் புலிகள் மீதான அவதூறுப் பிரச்சாரத்தை முடுக்கி விட்டும், ஜனநாயகம் என்ற போர்வையில் போலித் தேர்தலை நடத்தி ஏற்படுத்திய பொம்மை அரசின் துணையோடும் விடுதலைப் புலிகளை இராணுவரீதி யாகவோ, அரசியல் ரீதியாகவோ வெற்றி கொள்ள முடியாத ராஜீவ்காந்தி,

தொடர்ச்சி 19ம் பக்கம்

## துரோகிகள் முகாம்களை விட்டு விலகிய,

# ஆயிரத்துக்குமதிகமானோர் விடுதலைப் புலிகளிடம் சரண்!

## துரோகத் தலைமை தப்பி ஓட்டம்!!

தமிழீழத்தில் இந்திய அமைதிப்படை திரும்பிய இடங்களில் விடுதலைப் புலிகளும் சிங்கள இராணுவத்தினரும் சேர்ந்து பொது மக்களைத் தாக்குவதாகவும், அதை எதிர்த்து தமது படை பெருந்தொகையான விடுதலைப் புலிகளையும், சிங்கள இராணுவத்தினரையும் தாக்கி அழித்து வருவதாகவும் ஈ. பி. ஆர். எல். எப்., ஈ. என். டி. எல். எப்., டெலோ மற்றும் தமிழர் தேசிய அமைப்பு ஆகிய இனத் துரோகக் கும்பல்களின் சார்பில் பல்வேறு அறிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன.

- ஒரு இலட்சத்துக்கும் அதிகமான இந்தியப் படை இரண்டு ஆண்டுகளாக நின்று முட்டுக் கொடுத்து தூக்கி நிறுத்திய - தமது பதவி நாற்காலிகளைக் காப்பாற்றிக்கொள்வதற்காக ஈ. பி. ஆர். எல். எப். கும்பல் இளைஞர்களைப் பிடித்துச் சென்று கட்டாயப் பயிற்சி கொடுத்து உருவாக்கி வைத்திருந்த படை (C. V. F., T. N. A. என்பன) தற்போது கலகலத்து சிதறிக்கொண்டிருப்பதால் இந்த இனத் துரோகக் கும்பல் பெரும் பீதியுற்றிருக்கின்றது.

அதனால்தான் சிங்கள இராணுவமும், விடுதலைப் புலிகளும் கூட்டாகச் சேர்ந்து தாக்குவதாக இவர்கள் அலறத் தொடங்கியிருக்கின்றனர். அதே நேரம் கலகலத்துச் சிதறியோடும் தமது படைக்கு தைரியமூட்டி அதை கட்டுக்குள் கொண்டுவருவதற்காக விடுதலைப் புலிகள் - சிங்கள இராணுவம் கூட்டுத் தாக்குதலைத் தாங்கள் முறியடித்து ஏராளமான விடுதலைப் புலிகளையும், சிங்கள இராணுவத்தினரையும் அழித்து வருவதாக இவர்கள் இன்னொருபுறம் அறிக்கை வெளியிட்டு வருகின்றனர். இவற்றில் எதுவித உண்மையும் இல்லை. இது போன்ற பொய்ப் பிரச்சாரங்களினால் சிதறிச் சிதைந்து போன இவர்களது படையை மீண்டும் ஒன்று சேர்க்கவோ, அன்றித் தாம் எதிர்நோக்கியிருக்கும் வீழ்ச்சியைத் தவிர்க்கவோ இவர்களால் முடியாது.

தமிழீழத்திலிருந்து இந்தியப்படை வெளியேறிய மாவட்டங்களில் இவர்களோடு சேர்ந்து ஈ. பி. ஆர், எல். எப், ஈ. என். டி. எல். எப், டெலோ, புளட் தலைமைகளும் வெளியேறியுள்ளன.

அமைதிப்படையின் பாதுகாப்புடன் ஆயுதங்களையும் பதவிகளையும் பயன்படுத்தி முறைகேடான முறையில் தாம் சேர்த்துவைத்திருக்கும் உடைமைகளையும், தமது உயிர்களையும் காப்பாற்றிக்கொள்வதற்காக வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடுவதற்கான ஏற்பாடுகளையும், ஏற்கெனவே இவர்கள் செய்து முடித்துவிட்டனர்.

தமிழினத்தையோ அன்றி தம்மையோ இத்துரோக அமைப்புகளின் தலைமைகள் ஒரு போதும் பாதுகாக்கப்போவதில்லை என்பதை நன்குணர்ந்த தமிழர் தேசிய படை, மக்கள் தொண்டர்படை (T. N. A., C. V. F.) இளைஞர்கள் அவற்றிலிருந்து ஆயுதங்களுடன் வெளியேறி, சாரி சாரியாக விடுதலைப் புலிகளிடம் சரணடைந்து வருகின்றனர். இது


**அம்பாறை மாவட்டம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதன் பின் அரசியற் பிரிவு பொறுப்பாளர் கருணாவும் வீரர்களும் மக்களுடன்.**



www.tamilarangam.net



அம்பாறை மாவட்டம் தம்பிலுவில் திருக்கோவில் T.N.A. முகாம்களில் இருந்து விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் ஒரு பகுதி.



வரை ஆயிரத்துக்கும் அதிகமானோர் இவ்வாறு சரணடைந்துள்ளனர். அவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளால் அவர்களது பெற்றோர் களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

16-11-89 முதல் 27-12-89 வரை துரோகப் படைகளிலிருந்து விலகிய இளைஞர்கள் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தது பற்றிய விபரம் :-

16-11-89 அன்று, மட்டக்களப்பு கிண்ணியடி என்னும் இடத்தில் இரண்டு டெலோ வினர் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

18-11-89 அன்று, சாவகச்சேரியில் 2 ஈ.என். டி. எல். எப். இனர் விடுதலைப் புலி களிடம் சரணடைந்தனர்,

அதே தினம் மட்டக்களப்பு முன்றாச்சி மடம் என்னும் இடத்தில் 2 ஈ.பி.ஆர். எல்.எப். இனர் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த னர்.

26-11-89 அன்று, கிளிநொச்சியில் 2 டெலோ வினர் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

27-11-89 அன்று கிளிநொச்சியில் 3 சி.வி.எப். இனர் விடுதலைப் புலிகளிடம் ஆயுதங் களுடன் வந்து சரணடைந்தனர். மட்டக்களப்பு சந்திவெளியில் 2 ஈ.என்.டி.எல்.எப். இனர் ஆயுதங் களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

28-11-89 அன்று, திருகோணமலையில் 3 வாரப் பயிற்சி முடித்த 100 ஈ.என். டி. எல். எப். இனர் விடுதலைப் புலி களிடம் சரணடைந்தனர்.

29-11-89 அன்று, ஈ. என். டி. எல். எப். ஐச் சேர்ந்த ஒருவர் ஆயுதங்களுடன் விடுத லைப் புலிகளிடம் சரணடைந்தார்.

மட்டக்களப்பு முனைக்காடு என்னு மிடத்தில் மூன்று சி. வி. எப். இனர் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த னர்.

ஈ. பி. ஆர். எல். எப். ஐச் சேர்ந்த ஒருவர் அம்பாந்துறையில் வெடி குண்டுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தார்.

30-11-89 அன்று, கிளிநொச்சியில் ஆயுதத் துடன் ஈ. என். டி. எல். எப். ஐச் சேர்ந்த ஒருவர் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தார்.

வாழைச்சேனையில் ஈ. என். டி. எல். எப். ஐச் சேர்ந்த மூவர் ஆயுதங் களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

மட்டக்களப்பு சந்திவெளியில் 5 ஈ.பி.ஆர்.எல்.எப். இனர் ஆயுதங் களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

01-12-89 அன்று, கல்முனையில் ஈ. என். டி. எல். எப். ஐச் சேர்ந்த ஒருவர் ஆயுதங் களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**02-12-89** அன்று, வவுனியா குழுமாட்டுச் சந்தியில் இரண்டு ஈ.பி.ஆர்.எல்.எப்.இனர் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

மட்டக்களப்பு தேத்தாந்தீவு என்னும் இடத்தில் ஈ. பி. ஆர். எல். எப். இனர் 2 பேர் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

கிரான் என்னும் இடத்தில் ஈ.பி.ஆர். எல். எப். ஐச் சேர்ந்த ஒருவர் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தார்.

**04-12-89** அன்று, மட்டக்களப்பு மாவட்டம் கழுதாவளையில் 13 ஈ. என். டி. எல். எப். இனர் விடுதலைப் புலிகளிடம் ஆயுதங்களுடன் சரணடைந்தனர்.

மட்டக்களப்பு உன்னிச்சையைச் சேர்ந்த மூன்று ஈ. பி. ஆர். எல். எப். இனர் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டம் பழுகாமம் என்றுமிடத்தில் 3 ஈ.என்.டி.எல்.எப். இனர் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

**05-12-89** அன்று, மன்னார் மாவட்டம் நாகதாழ்வு என்னும் இடத்தில் சி.வி.எப். ஐச் சேர்ந்த ஒருவர் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தார்.

மன்னாரில் சேர்ந்த சி. வி. எப். ஐச் சேர்ந்த ஒருவர் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தார்.

மட்டக்களப்பு வாழைச்சேனையில் ஈ. பி. ஆர். எல். எப். ஐச் சேர்ந்த ஒருவர் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தார்.

மட்டக்களப்பு காரைத்தீவில் ஈ. பி. ஆர். எல். எப். ஐச் சேர்ந்த ஒருவர் சரணடைந்தார்.

யாழ் மாவட்டத்தில் ஈ. பி. ஆர். எல். எப். ஐச் சேர்ந்த ஒருவர் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் டெலோவைச் சேர்ந்த 11 பேரும், ஈ.என்.டி. எல். எப். ஐச் சேர்ந்த 6 பேரும் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

வவுனியா மாவட்டம் குழுமாட்டு சந்தியில் சி. வி. எப். ஐச் சேர்ந்த ஒருவர் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தார்.

**06-12-89** அன்று, நெடுங்கேணியில் சி.வி.எப். ஐச் சேர்ந்த ஒருவர் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தார்.

கிளிநொச்சியில் டெலோவைச் சேர்ந்த நால்வர் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

நெடுங்கேணியில் சி. வி. எப். ஐச் சேர்ந்த ஒருவர் விடுதலைப்புலிகளிடம் சரணடைந்தார்.

மட்டக்களப்பு பழுகாமத்தில் நடந்த சண்டையில் ஈ. என். டி. எல். எப். முகாம் தகர்க்கப்பட்டு ஐவர் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து ஏராளமான ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இச் சண்டையில் விடுதலைப் புலிகள் தரப்பில் காப்டன் றோபேட், யசோ ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

**07-12-89** அன்று, பண்டாரிக்குளத்தில் ஈ. என். டி. எல். எப். ஐச் சேர்ந்த 8 பேர் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

தம்பிலுவில் டெலோவைச் சேர்ந்த இருவரும், ஈ. பி. ஆர். எல். எப். ஐச் சேர்ந்த ஒருவரும், சி. வி. எப். ஐச் சேர்ந்த ஒருவரும் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.


**அம்பாறை மாவட்டத்தில் நவம்பர் 27-ம் நாள் யோகி, பாலசிங்கம் ஆகியோர் பங்கேற்ற மாவீரர் நாள் பொதுக்கூட்டம்.**



www.tamilarangam.net



மாவீரர் நாள் பொதுக்கூட்டத்துக்கு வந்திருந்த மக்களில் ஒரு பகுதி.



வவுனியாவில் சி.வி.எப்.ஐச் சேர்ந்த ஒருவர் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தார்.

**08-12-89** அன்று, பரந்தனில் டெலோவினர் இருவர் புலிகளிடம் சரணடைந்தனர். ஈ.என்.டி.எல்.எப். ஐச் சேர்ந்த ஐவர் திருகோணமலை நிலாவெளிப் பகுதியில் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

**10-12-89** அன்று, மட்டக்களப்பு புன்னைச் சேனையில் ஈ. என். டி. எல். எப். ஐச் சேர்ந்த இருவர் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

**12-12-89** அன்று, வவுனியா நெடுங்குளத்தில் ஈ. என். டி. எல். எப். ஐச் சேர்ந்த இருவர் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

வவுனியா நெடுங்குளத்தில் சி.வி.எப். ஐச் சேர்ந்த இருவர் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

**17-12-89** அன்று, பரந்தனில் மூன்று மக்கள் தொண்டர் படை (சி. வி. எப்.) யினர் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

**19-12-89** அன்று, மட்டக்களப்பு மாவட்டம் மண்டூரில் ஈ. பி. ஆர். எல். எப். ஐச் சேர்ந்த ஒருவரிடமிருந்து பொது மக்கள் தாம் கைப்பற்றிய ஆயுதங்களை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர்.

**20-12-89** அன்று, கிளிநொச்சியில் ஈ. பி. ஆர். எல்.எப். ஐச் சேர்ந்த ஐவரும், ஈ.என். டி.எல்.எப். ஐச் சேர்ந்தஒருவரும் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

**21-12-89** அன்று, திருகோணமலை மாவட்டம் மூதூர், ஈச்சிலம்பத்தை ஐ.பி.கே.எப். முகாமில் இருந்து ஆயுதங்களுடன் தப்பிவந்த ஈ. என். டி. எல். எப். ஐச் சேர்ந்த ஐவர் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

**21-12-89** அன்று, மட்டக்களப்பு மாவட்டம் உன்னிச்சை என்னும் இடத்தில் ஈ.பி. ஆர். எல். எப். ஐச் சேர்ந்த ஒருவர் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தார்.

**22-12-89** அன்று, திருகோணமலையில் உள்ள அலஸ்தோட்டம் என்னும் இடத்தில் டெலோவைச் சேர்ந்த நால்வர் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

**24-12-89** அன்று, வவுனியாவில் ஈ. பி. ஆர். எல். எப். ஐச் சேர்ந்த ஒருவர் ஆயுதங்களுடன் வந்து விடுதலைப்புலிகளிடம் சரணடைந்தார்.

**24-12-89** அன்று, மட்டக்களப்பில் 25 ஈ.பி.ஆர். எல். எப். இனர் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

**25-12-89** அன்று, மட்டக்களப்பில் உன்னிச்சையில் புளட் குழுவைச் சேர்ந்த ஒருவர் ஆயுதங்களுடன் சரணடைந்தார்.

**26-12-89** அன்று, கிளிநொச்சியிலுள்ள உருத்திரபுரம் என்னும் இடத்தில் இரண்டு டெலோவினர் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

**26-12-89** அன்று, மட்டக்களப்பு மண்டூரில் டெலோவைச் சேர்ந்த ஒருவர் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தார்.

**27-12-89** அன்று, மூதூர் ஈச்சிலம்பத்தையில் ஈ.என்.டி.எல்.எப். ஐச் சேர்ந்த ஐவர் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தனர்.

**27-12-89** அன்று, மட்டக்களப்பில் உள்ள குறிஞ்சாமுனை என்னும் இடத்தில் டெலோவைச் சேர்ந்த ஒருவர் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தார். ★

www.tamilarangam.net












புலேந்திரன் குமரப்பா உட்பட சயனைட் அருந்தி உயிர்நீத்த 12 வீரர்களின் 2ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி

பின் அட்டையில்

அம்பாறை மாவட்டம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதன் பின் அரசியற் பிரிவு பொறுப்பாளர் கருணாவும் வீரர்களும் மக்களுடன்.

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்